


ராஜ பீடி கம்பெனி; கொழும்பு-14

Registered as a News paper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி
National Tamil Daily
மலர் 10 [16-3-68] இதழ் 35
யாழ்ப்பாணம் பிலவங்க பங்குனி 3 ஜுல்ஹஜ் 16 சனிக்கிழமை




ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# கல்வி மசோதாவை மந்திரி வாபஸ்பெறுவாரா?

## ஜி. ஜி. தெரிவித்த நம்பிக்கை

யாழ்ப்பாணம், சனி

பொதுக்கல்வி மசோதா நிறைவேற்றப் பட்டால் கல்வி இலாகாவில் தற்போதுள்ள சீர்கேட்டிலும் பார்க்க மிக மோசமான நிலை ஏற்படும். கல்வி மந்திரி பொதுக்கல்வி மசோதாவை வாபஸ் பெறும் நிலையிலிருக்கிறார் விரைவில் இதை உத்தியோக பூர்வமாக அறிவிப்பாரென எதிர்பார்க்கிறேன்.

யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று முன்தினம் கல்விசீர் கேடுபற்றி தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்,

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

தேசிய அரசாங்கத்திலுள்ள கட்சித் தலைவர்கள் பொதுக்கல்வி மசோதாவை பரிசிலனை செய்ய வேண்டுமென நான் ஐக்கிய நாடுகள் சபைக்கு செல்வதற்கு முன் பிரதமரிடம் கேட்டுக் கொண்டேன் அவரும் என் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்.

பொதுக்கல்வி மசோதாவை எதிர்த்து நான் 5 நாட்கள் அலரி மாளிகையில் நடந்த கூட்டத்தில் பேசினேன். நான் கூறிய விளக்கத்தை கல்வி மந்திரி உட்பட எல்லாரும் ஏற்றுக் கொண்டனர். இன்று அம் மசோதாவை கல்விமந்திரி வாபஸ்பெறும் நிலையிலிருக்கிறார்.

அகில இலங்கை

## வைத்திய பரிசோதனை உதவியாளர் வேலைநிறுத்தம்

### சத்திர சிகிச்சை, மலேரியா தடுப்பு வேலைகள் பாதிப்பு

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கை வைத்திய பரிசோதனை உதவியாளர் தொழில்நுட்பஸ்தர்கள் 400 பேர் இன்று காலையிலிருந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள உயர்வு சம்பந்தமான கோரிக்கையை இவர்கள் முன்வைத்துவேலைநிறுத்தம் செய்கின்றனர்.

அகில இலங்கை வைத்திய பரிசோதனை உதவியாளர், தொழில் நுட்பஸ்த்தர்கள் அமைச்சிடம் சமர்ப்பித்திருந்த சம்பள உயர்வு சம்பந்தமான கோரிக்கைபற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்காததைத் தொடர்ந்தே இவ்வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் வேலைநிறுத்தத்தினால் நாடெங்கிலுமுள்ள பெரிய ஆஸ்பத்திரிகளில் சத்திர சிகிச்சைகள் இன்று பாதிக்கப்பட்டன. மலேரியா தடுப்பு நடவடிக்கைவேலைகள், அம்மைப்பால் தடுப்பு மருந்து விநியோக வேலைகள் போன்றவைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணஆஸ்பத்திரியிலும் இன்றுகாலை முதல் பரிசோதனை உதவியாளர் எல்லாரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## சீன கம்யூனிஸ்ட் கட்சியில் சேர எஸ். டி. பண்டாரநாயகா முடிவு

### ஸ்ரீலங்கா — யு. என். பி. இரண்டும் வகுப்புவாதக் கட்சிகளாம்

கொழும், சனி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சி இரண்டுமே வகுப்புவாதக்கட்சிகள் இன்றுசமஷ்டிக்கட்சியை முழு மூச்சாக எதிர்க்கிறவர்கள் 1965-ம் ஆண்டுத் தேர்தல் முடிந்தபிறகு பதவியைக் காப்பாற்றுவதற்காக ஆதரவு பெறும்பொருட்டு சமஷ்டிக்கட்சிக்கு எந்தவிதமான சலுகைகளையும் கொடுப்பதற்குத் தயாராகவிருந்தார்கள்.

இவ்வாறு திரு. எஸ். டி. பண்டாரநாயகா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்வதற்கு தாம் விண்ணப்பிக்கப்போவதாக திரு. எஸ். டி. பண்டாரநாயகா தெரிவித்துள்ளார்

சமஷ்டிக் கட்சியினருடன் காலஞ்சென்ற எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயகா ஒப்பந்தம் செய்துகொண்டபொழுது ஐக்கிய தேசியக் கட்சியினர் அதனை மும்முரமாக எதிர்த்ததையும் இன்று சமஷ்டிக்கட்சியுடன் சேர்ந்து கொண்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆரம்ப அங்கத்தவனாகவும் அதன் பொதுக்காரியதரிசியாகவும் கட்சியில் [illegible] பதவிகளையும் வகித்திருக்கின்றேன் முதல் கட்சியின் சார்பில் வெற்றி பெற்று பார்லிமெண்டுக்குப் போனவர்களில் நானும்ஒருவன். எனவே பதவிக்காகக் கட்சியில் சேர்ந்தவர்களைவிட அக்கட்சியின் குறைநிறைகளைப்பற்றி பேச எனக்கு அதிக உரிமையுண்டு என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற ஜனநாயகத்தை நான் எதிர்க்கின்றேன். இது சுதந்திரக்கட்சித் தலைவர்களின் தென்னந்தோட்டங்களைப் பெருக்கிக் கொள்ளவும், பங்களாக்கள் கட்டிக்கொள்ளவும் பணத்தைப் பெருக்கிக்கொள்ளவும்தான் உதவுகின்றது. இவர்கள்தான் தமது தோட்டங்களை இயக்கக்கூடிய தான புரட்சியை ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்

[8-ம் பக்கம் பார்க்க]

## தங்கத்துக்கு பலத்த கிராக்கி

### உலகில் ஏற்பட்டுள்ள புதிய நிதி நெருக்கடி

வாஷிங்டன், மார்ச் 15

உலகச் சந்தையில் தங்கத்துக்கு ஏற்பட்டுள்ள கடுமையான கிராக்கியால் பல நாடுகளிலும் நிதி நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் பிரிட்டிஷ் தங்க சேமிப்பு லண்டன் ஸ்டொக் எக்ஸ்சேஞ் ஆகியன மூடப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் வங்கியும் தற்காலிகமாக மூடப்பட்டது.

கனடாவும் தனது தங்கச் சேமிப்பை மூடியுள்ளது.

மலேஷியா, சிங்கப்பூர் இரண்டும்இதேநடவடிக்கைகளை எடுத்துள்ளன.

ஹொங்கொங்கில் தங்கத்துக்குத் தொடர்ந்து பலத்த கிராக்கி இருந்துவருகிறது.

வாஷிங்டனில் ஐரோப்பிய தங்கக் கூட்டுச் சேர்க்கையைச் சேர்ந்த நாடுகளை அமெரிக்கா தற்போது ஏற்பட்டுள்ள உலக நிதி நெருக்கடி நிலைமையை ஆராயவென அழைத்துள்ளது.

## இந்து மாமன்ற பிரதிநிதிகள் நிற்சாமத்திற்கு விஜயம்

### சமாதானம் ஏற்படுத்தமுயற்சி

சங்கானை, வெள்ளி

சங்கானையில் நடந்த சாதிக்கலவரம் பற்றி விசாரணை நடாத்த இந்துமாமன்றப் பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து இங்கு வந்துள்ளனர். கலவரம் நடைபெற்ற இடமாகிய நிற்சாமத்தைப் பார்வையிட்டு இரு பகுதி மக்களுடனும் தனித்தனியே கலந்துரையாடினர்.

திரும்பவும் இருசாராரும் சந்திக்கும் முறையான மாநாடொன்றைக் கூட்டி அதன் மூலம் நல்லதோர் சுமுகமான முடிவை ஏற்படுத்த எல்லோரும் சம்மதம் தெரிவித்தனர்.

இந்துமாமன்றப் பிரதிநிதிகளாகிய முதலியார் திரு. சின்னத்தம்பி, முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சி. முத்துக்குமாரசுவாமி. திரு. எஸ் சின்னத்தம்பி ஆகியோர்கலந்துகொண்ட கலந்துரையாடலின்பயனாகநல்லமுறையில்பிரச்னைகள் தீர்வதற்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளனவாம்.

## கண்டிமேயர்

கண்டி, சனி

புதிய கண்டிமேயராக யு. என். பி. யைச் சேர்ந்த சேர் பெனட் சொய்சா இன்று தெரிவு செய்யப்பட்டார். உதவி மேயராக திரு. திவான் ரதிணாயக்கா [illegible] யப்பட்டுள்ளார்.

## இரு பாலகர்கள் கிணற்றுள் மூழ்கி மரணம்

### பளையில் பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

தாயும் தந்தையும் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கையில் கிணற்றை எட்டிப் பார்த்த இரு சகோதரர்கள் அதற்குள் வீழ்ந்து மரணமடைந்தார்கள். இப்பரிதாபகரமான சம்பவம் பளைப்பகுதியிலுள்ள முள்ளியான் என்ற இடத்தில்நடைபெற்றது.

இந்த நெஞ்சை உருக்கும் சம்பவத்தில் மரணமான இரு சகோதரர்களும், மூன்று வயதும் இரண்டுவயதும் கொண்ட பச்சிளம் பாலகர்களே. தாயும் தந்தையும்தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கையில் இந்த இரு குழந்தைகளும் கிணற்றை எட்டிப்பார்த்த போது தவறி விழுந்ததாக பொலிசாரின் விசாரணையின்போது தெரியவந்தது.

பளைப் பகுதிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராசையா விசாரணையை மேற்கொண்டடர். வடபகுதியில் அண்மையில் நடைபெற்ற விபத்து மரணங்களில் இதுவே மிகவும் பரிதாபகரமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும், [கா. நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## கல்வி

**இசைவகுப்பு:**
எக்கோடியன்—கிட்டார், மிருதங்கம், மெண்டோலின் முதலிய வாத்தியபயிற்சி அளிக்கப்பெறும். நாதனி மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ், 83, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1602

**பரீட்சை**
திரு. வே. சிவக்கொழுந்து அவர்களால் தயாரிக்கப்பெற்ற [1] ஆறும் வகுப்பு மாதிரிப் பரீட்சைப் பத்திரம்— 6 பாடங்களில் ஒரு செற் 50 சதம். 10 செற் ரூபா 3-00. [2] மாணவர் தேர்ச்சி அறிக்கை 100க்கு வெள்ளை ரூபா 10-00, லெஜர் ரூபா 12-00, பிறிஸ்டல் ரூபா 15-00, புத்தக ரூபம் ரூபா 30-00. முற்பணம் அனுப்பி விண்ணப்பிக்குக. உரிமையாளர்- கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1607

**மாதிரிகை வினாத்தாள்கள்:**
ஆறும் வகுப்பு முதலாம் பருவப் பரீட்சை மாதிரிகை வினாத்தாள்கள் எல்லாப் பாடங்களுக்கும் தனித்தனி கிடைக்கும். ஆசீர்வாதம் புத்தகசாலை, கண்டி வீதி, (கிளை: 61, பெரியகடை, ஆஸ்பத்திரி வீதி) யாழ்ப்பாணம். 1606

## தவறிவிட்டது

**மூக்குக்கண்ணாடி**
கறுப்புநிறமுள்ள பிறேம் போடப்பட்ட மூக்குக்கண்ணாடியொன்றுதோலால்செய்யப்பட்ட கூட்டுடன் 14-3-68-ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். 1612

## விற்பனைக்கு

**காணி**
நல்லூர் கோவிலுக்கு முன்னுள்ள பருத்தித்துறை வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்: திருமதி மகாலிங்கம், சுதுமலை சந்தி, மானிப்பாய். 1609


**காணி:**
கோப்பாய் தெற்குகட்டப்பிராய் பிறக்கிறுசி சின்னத்துரை வீட்டுக்கு முன்பக்கமாக 2பரப்புக்காணி விற்பனைக்குண்டு, வீடு கட்டவும் வியாபாரம் செய்வதற்கும் வசதியான காணியாகும். விலை ரூபா 15,000 வரை வரும். விரும்பியோர் கீழ்க்கண்ட விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் 1611, ஈழநாடு மே/பார்த்து, யாழ்ப்பாணம். 1611

## கல்வி

பெண்கள் தையலில் பயிற்சி பெறவும் தராதரப் பத்திரம் பெறவும், நவீன விஞ்ஞான முறையில்தையல் கற்பிக்கப்படுகின்றது. மூன்று வகையான நேரங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன. [i] மு. ப. 9 — 12 வரை [ii] பி. ப. 2-00 — 5-00 வரை [iii] போயாவும் போயா முன்தினமும் மு. ப. 9-00 — பி. ப. 5-00 வரை. மாதக்கட்டணம் ரூ. 7-50ச. மட்டுமே. விண்ணப்பியுங்கள், அல்லது நேரில் வாருங்கள். கலா தையல் பயிற்சிச்சாலை (சிதா சோடா கொம்பனி அருகே) 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1796


இப்பொழுது திரையிடப்படுகிறது!

இங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [ஹட்டன்]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

# சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)


## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, வெள்ளி
காங்கேசன்துறை ரூமன் கத்தோலிக்க பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் பாடசாலை அதிபர் திரு. ஞா. பத்திநாதர் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஞா. பத்திநாதர், காரியதரிசி: திரு. மு. செல்வராசா, உபகாரியதரிசி: திரு. க. தம்பிப்பிள்ளை, தனாதிகாரி: திரு. அ. கோணமலை. 5 பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

அநுராதபுரம், வெள்ளி
முஸ்லீம் வாலிபர் சங்க 15வது வருடப் பொதுக் கூட்டம் அநுராதபுரம் முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: ஜனாப் பி. எம். அன்சாரி, உப-தலைவர்கள்: எம். எம். ரி. தீன், எம். ஏ. சுல்தான், காரியதரிசி: எம். ஏ. ரஹிமான், உப-காரியதரிசி: அன்பு ஜவஹர்ஷா, பொருளாளர்: பி. எஸ். ஏ. கபூர், உப-பொருளாளர்: ஏ. மஜீட்.

ஃ ஃ ஃ

காங்கேசன்துறை, வெள்ளி
தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சனசமூக நிலையத்தின் 24-வது ஆண்டு புதிய நிர்வாகிகள் தெரிவு மேற்படி நிலையத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. ம. ஆறுமுகம். உபதலைவர்: திரு. வ. கிருஷ்ணமூர்த்தி இணைச்செயலாளர்கள்:- திரு. இ. நடராஜா, திரு. நா. கந்தசாமி. தனாதிகாரி:- திரு. சி. தருமலிங்கம், நிலைய மேற்பார்வையாளர்கள்:- திரு. ஆ. தேவராஜா, திரு. சீ. இராசரத்தினம், போஷகர்கள்:- திரு. க. பசுபதி, திரு. நா. ஆறுமுகம், திரு. சி. இராசரத்தினம்.


83வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

2-வது மாதம்
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர். - தேவிகா நடித்த
மறக்க முடியுமா?

MANOHARA
(JAFFNA)
Daily at 4-45,7-00, 9-45p.m.
Frnest Borgnine
Goe Flynn
in
McHALES NAVY

REGAL JAFFNA
Daily at
4-40, -700, & 9-45 p.m
George Hamilton&
Carrol Baker
in
JACK OF DIAMONDS


# 'நெஸ்பிறே விநியோகத்தில் புதியமுறை வேண்டும்'

சங்கானை, வெள்ளி
யாழ்ப்பாணம் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளில் நெஸ்பிறே பால்மா விநியோகத்திற்கு ஒரு புதிய முறை வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக் கூப்பனுக்கும் வாரத்திற்கு 1 றாத்தல்நெஸ்பிறேயும் வைத்திய அதிகாரியின் சிபார்சுடைய நோயாளிகளுக்கு மாதத்திற்கு இரண்டரை றாத்தல் நெஸ்பிறேயும் புத்தளம், சிலாபம், அனுராதபுரம் ஆகிய இடங்களில் வழங்கப்பட்டுவருகிறது. அதனால் அப்பகுதி மக்கள் எவ்வித இடர்பாடுமின்றி தங்களுக்கு தேவையான பால்மாவைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

இதேமுறையை யாழ்ப்பாணத்திலும் அமுல் நடாத்தினால் தேவையான மக்கள் சிரமமின்றி தங்களுக்குத் தேவையான பால்மாவை பெறமுடியும் என சங்கானை பட்டண அபிவிருத்திச் சபையினரிடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவிற்கும் பிரதம உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் எழுதிய மகஜர் ஒன்றில்குறிப்பிட்டுள்ளனர்.

மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: பால் உணவு எளிதில் கிடைக்காத காரணத்தினால் நோயாளிகளும், குழந்தைகளும் எவ்விதம் கஷ்டமடைகின்றனர் என்பதையும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மிகுந்த பிரயாசையின் காரணத்தால் 1 றாத்தல் நெஸ்பிறே பெறக்கூடியதாக இருக்கிறதுடன் இது ஒரு வாரத்திற்குக்கூட போதுமானது அல்ல எனத்தெரிவித்துள்ளனர்.

இந்த ஒரு றாத்தல் நெஸ்பிறேகூட வியாபாரியின் 'கருணை' இருந்தால் மட்டுமே பெறக்கூடியதாகஇருக்கிறது. கொடுக்கப்படும் அளவு எவ்வளவானாலும் இதுவிநியோகம் செய்யப்படும்முறை சீராக இல்லாத காரணத்தால் மக்கள் கஷ்டம் அடைவதுடன் கள்ளச்சந்தை வியாபாரிகளுக்கும் வழிவகுக்கப்படுகிறது இதை தவிர்ந்த ஒரு சீரானமுறையை அமுலாக்குக்கொண்டு வரவேண்டும்.

# "மன்னர்கள் வளர்த்த கலையை நாம் வளர்ப்போம்"

## ஸ்ரீகாந்தா கூறுகிறார்

வெள்ளவத்தை, வெள்ளி
"புதிய கருத்துக்களோடு கூடிய நல்ல சமூக நாடகங்களை நாம் உருவாக்க வேண்டும். முற்காலத்தில் மன்னர்களும் பிரபுக்களும் வளர்த்த தமிழ்க்கலைகளை இன்று பொதுமக்களாகிய நாம் வளர்க்கவேண்டியநிலையில் உள்ளோம். ஈழத்தில் நாட்டியம், சங்கீதத்துறைகள் முன்னேறியிருப்பினும் தமிழ் நாடகத்துறையும், திரைப்படத்துறையும் இன்னும் போதியளவு வளர்ச்சியடையவில்லை."

இவ்வாறு காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா ஹாவ்லொக் டவுண் லும்பினி அரங்கில் நடைபெற்ற "இருபது நாழிகை" நாடகத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

ஒரே காட்சியில் எட்டு மணித்தியாலங்கள் நடைபெறவேண்டிய சம்பவங்களைத் திறமையான முறையில் காண்பித்த கொழும்பு கலைச் சங்கத்தார் இந்நாடகத்தின்மூலம் தமிழ் நாடகத்துறைக்குப் புத்துயிரூட்டியுள்ளனர். இதுபோன்ற இன்னும் பல நாடகங்களை இவர்கள் உருவாக்கவேண்டும். எமது அமிழ்தினுமினிய தமிழ்மொழிஎன்றும்வழமையானது. நல்ல நாடகங்களின்மூலம் அதன் வழமையும் இனிமையும் இன்னும் மேம்படவேண்டும்."

## யானைகள் அட்டூழியம்

புதுக்குடியிருப்பு, வெள்ளி
புதுக்குடியிருப்பு ஒலுவன்புல வெளினும் சமவெளியில் வேளாண்மை அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்த ஆறு விவசாயிகளின் சூட்டை ஏறக்குறைய பன்னிரண்டு யானைகள் புகுந்து தின்று, அழிவு செய்துள்ளனவாம்.

இதனால் நூற்றி ஐம்பது புசல்வரை அழிந்து விட்டதாம். இப்படியான அழிவுகள் யானைகளால் இப்பகுதியில் அடிக்கடி நிகழ்கின்றதாம்.

## இடமாற்றம்

அனலைதீவு, வெள்ளி
அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சென்ற 6 வருடங்களாக கடமையாற்றிய ஆசிரியை திருமதி தவபாக்கியம் தர்மலிங்கம் கனகராயன் குளம் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அனலைதீவு வடலூர் பாடசாலை ஆசிரியர்களினால், மாணவர்களினாலும் நடத்தப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் திரு. இராசையா, திரு. செல்லத்துரை, செல்வி ஐயம்பிள்ளை பத்தினி ஆகியோர் அவரது சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.


"யாழ்ப்பாணக் கிளை"
டபிள்யூ. எஸ். மெனுண்டோ அன் சன்,
(நீர்கொழும்பு)

திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள் சம்பந்தமான சகல ஒழுங்குகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். புத்தம் புதிய பூக்கள், பூச்செண்டுகள், மலர் வளையங்கள் எம்மிடம் கிடைக்கும். பல ரகப் பிரேதப் பெட்டிகள் எம்மிடம் உண்டு. பிரேதம் கெடாதபடி பாதுகாத்துவைப்பதில் நவீன முறைகள் கையாளப்படும். பிரேதம் கொண்டு செல்லும் நவீன வண்டிகள் உண்டு. ஞாபகச் சின்னங்கள் சிறந்த வகையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

இரவு பகல் எந்நேரமும் சேவை அளிக்கப்படும்.

சலார் சகாயம்.

84, பாங்ஷால் வீதி, சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு ஐரோப்பாவில் கொந்தளிப்பு

## செக். இராணுவ தளபதி தற்கொலை செய்துள்ளார்

பிராக், மார்ச் 15

செக்கோஸ்லாவாக்கிய இராணுவத் தளபதி ஒருவர், தற்கொலை செய்துள்ளாரென இங்கு அறிவிக்கப்பட்டது. அவரது தற்கொலைக்கான காரணங்கள் என்ன என்பதுபற்றி அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இதற்கிடையில் மற்றுமொரு செக்கோஸ்லாவாக்கிய இராணுவத் தளபதி, அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இவர் செக். ஜனாதிபதி நவோட்னியின் ஆதரவாளர் எனக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி நவோட்னிக்கெதிராக இப்போது பல சக்திகள் செக்கோஸ்லாவாக்கியாவில் இயங்கி வருகின்றன. பொதுவாகத் தற்போது அந்நாட்டில் நிலவி வரும் அரசியல் கொந்தளிப்பின் மற்றுமொரு அறிகுறியாகவே இராணுவத் தளபதியின் வேலைநீக்கம் கருதப்படுகிறது.

## போலந்து மாணவர் கல்லூரி செல்லவில்லை

வார்சோ, மார்ச் 15

போலந்தில் மாணவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொட்ஸான் நகரில் 3000 மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். மற்றுமொரு நகரமான லோட்ஸிலும் மாணவ ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

கிராக்கோ நகர் ஆர்ப்பாட்டங்களில் மாணவர்கள் பொலிசாருடன் மோதினர். மாணவர்கள் கல்லூரிகளுக்கும் செல்லவில்லை.

## யூகோஸ்லாவியாவில் பாதுகாப்பு நடவடிக்கை

பெல்கிரேட், மார்ச் 15

யூகோஸ்லாவியாவில், பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் பலப்படுத்த முற்பட்டுள்ளது.

மக்களின் சுதந்திரத்தையும், ஜனநாயக உரிமைகளையும் கட்டிக் காக்கும் நோக்கத்துடனேயே பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஐ. நா.

## பொதுச்சபைக்கு அணுஆயுத பரவல் தடை ஒப்பந்தம்

ஜெனீவா, மார்ச் 15

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் பற்றிய தனது விவாதங்களை இங்கு கூடியுள்ள ஆயுத பரிகரண மகாநாடு முடித்துக்கொண்டுள்ளது. ஒப்பந்தம், இனி ஐ. நா. பொதுச்சபைக்கு அனுப்பப்படும்.

ஆயுத பரிகரண மாநாட்டில் கலந்துகொண்ட 17 நாடுகளில், 8 நாடுகள் மட்டுமே, ஒப்பந்தத்துக்குத் தம்து பூரண இசைவைத் தெரிவித்துள்ளன. மற்றும் 8 நாடுகள், தமது இசைவை நிபந்தனைகளுடன் பின்போட்டுள்ளன.

நேற்று ஆயுத பரிகரண மாநாட்டில் பேசுகையில், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் பற்றி இந்தியா அதிருப்தியடைந்துள்ளதாக இந்தியப் பிரதிநிதி மீண்டும் வலியுறுத்தினர்.

## தூரகிழக்குப் பகுதியில் சீன தூண்டுதல் நடவடிக்கை

### ரஷ்ய தளபதி எச்சரிக்கை

மாஸ்கோ, மார்ச் 15

சோவியத் ரஷ்யாவின் தூர கிழக்கு இராணுவப் பிரிவின் தளபதி, அப்பகுதியில் சீனுவின் தூண்டுதல் நடவடிக்கைகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டிய அவசியமேற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சீனுவின் ஆட்சியிலுள்ள மா-சே-துங் ஆட்சியாளர், தூர கிழக்குப்பகுதியில் ரஷ்யாவுக்கெதிரான தூண்டுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால், அங்குள்ள ரஷ்ய இராணுவப் பிரிவின் பலம் அதிகரிக்கப்படவேண்டும் என அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

தூர கிழக்கில் சீனுவின் நடவடிக்கைகளுக்கு எதிராக மட்டுமின்றி, அமெரிக்க நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் ரஷ்யா அவதானத்துடன் செயலாற்ற வேண்டுமென ரஷ்ய தூர கிழக்கு இராணுவப் பிரிவின் தளபதி எச்சரித்துள்ளார்.

## அலஹபாத் அருகே ரயில் விபத்து

### 19 பேர் காயம்

அலஹபாத், மார்ச் 15

இந்திய வடகிழக்கு ரயில்வேப் பாதையில், நேற்று நடைபெற்ற ரயில் விபத்தொன்றில், மூன்று பெட்டிகள் தடம்புரண்டன. இவ் விபத்தில் காயமடைந்த 19 பேரில், ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ்விபத்துக்குக் காரணம் சதி நடவடிக்கையே எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். தண்டவாளத் தகடுகள், ரயில் பாதையின் சில இடங்களில் கழற்றப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

## ஹரியானு இடைத்தேர்தல்

### மே 12-ல்

புதுடில்லி, மார்ச் 15

இந்திய ராஜ்யமான ஹரியானுவில், இடைத் தேர்தல் மே 12-ந் திகதி நடைபெறுமெனத் தெரிகிறது.

முன்னர் மே 5-ந் திகதியெனக் குறிப்பிட்டிருந்த இத் தேர்தலை மே 12-ந் திகதியன்று நடத்தத் தேர்தல் கமிஷன் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இன்னும் சில தினங்களில் இம்முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

## ரூபா 1000 பிணையில்

வல்வெட்டித்துறை வெள்ளி பருத்தித்துறை சந்தையில் வைத்து செல்லத்துரை பரஞ்சோதி என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் பொலிசார் அதே இடத்தைச் சேர்ந்த எம். பீ. வீரபாகு என்பவரைக் கைதுசெய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வின்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 1000 பிணையில் செல்லுமாறும் மீண்டும் இம்மாதம் 24-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டுள்ளார்.

## மேலும் 5 ஆபிரிக்கர்களுக்கு தூக்குத் தண்டனை

### ரொடீஷியா விதித்தது

சலிஸ்பரி, மார்ச் 15

ரொடீஷிய ஸ்மித் அரசாங்கம், மேலும் 5 ஆபிரிக்கர்களுக்கு மரணதண்டனை விதித்துள்ளது. இவர்கள் ஆயுதங்களுடன் ரொடீஷியாவுக்குள் வந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த 5 ஆபிரிக்கர்களில் இருவர், தாம் ரொடீஷியாவுக்கு வந்த காரணம், ஸ்மித் ஆட்சியாளரின் சட்டங்களுக்கெதிராகப் போரிடவே எனக் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

## ரொடீஷியப் பிரச்னைக்கு பலாத்காரத் தீர்வு

### வில்சன் எதிர்க்கிறார்

லண்டன், மார்ச் 15

ரொடீஷியப் பிரச்னை பற்றித் தமது அரசாங்கம், ஐ. நா. பந்தோபஸ்து சபையுடனும், சாம்ராஜ்ய நாடுகளின் பிரதமர்களுடனும் தொடர்பு கொண்டுள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் இங்கு கூறியுள்ளார்.



ஆனால், ரொடீஷியப் பிரச்னையைத் தீர்க்கப் பலாத்காரம் பிரயோகிப்பதைத் தமது அரசாங்கம் ஆலோசிக்காது என்றும், அப்படி பலாத்காரம் பிரயோகிக்கும் எந்த நாட்டுக்கும் ஆதரவு அளிக்காது என்றும் திரு. வில்சன் மேலும் கூறினார்.

ரொடீஷியாவுக்கெதிராகப் பொருளாதாரத் தடைகள் விதிப்பது பற்றியே தமது அரசாங்கம் ஆலோசிக்கும் என்றார் அவர்.

## சீனுவிலுள்ள டானிஷ் தூதுவர் ஹனோய் செல்கிறார்

### சமரச முயற்சிக்காக

பீகிங், மார்ச்15

சீனுவிலுள்ள டானிஷ் தூதுவர், விரைவில் வடவியட்னும் தலைநகரான ஹனோய் செல்லவிருக்கிறார்.

ஹனோயில் அவர் வடவியட்னும் தலைவர்களைச் சந்தித்து, வியட்னும்போருக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பங்களை ஆராய்வார்.

இதேமாதிரி, பீகிங்கிலுள்ள சுவிடிஷ், நோர்வேஜிய தூதுவர்களும் ஹனோய் சென்றிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தெ. ஆபிரிக்கா கைது செய்த 33 தெ. மே. ஆபிரிக்கர் விடுதலை செய்யுமாறு

### பந்தோபஸ்து சபை கேட்கிறது

நியூயோர்க், மார்ச் 16

பிரிட்டோரியாவில் கைது செய்யப்பட்ட 33தென் மேற்கு ஆபிரிக்கர்களையும் விடுதலை செய்யுமாறு ஐ. நா. பந்தோபஸ்துசபை தென்னுபிரிக்காவைக் கோரியுள்ளது. இந்தக் கோரிக்கை அடங்கிய தீர்மானமொன்று சபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

அவ்விதம் இந்த 33 ஆபிரிக்கர்களையும் விடுதலைசெய்யத் தென்னுபிரிக்கா மறுத்தால், சபை உடனடியாகக் கூடி ஐ. நா. சாசன விதிகளுக்கேற்ப என்ன நடவடிக்கைகளைத் தென்னுபிரிக்காவிற்கெதிராக எடுக்க வேண்டுமென்பது பற்றித் தீர்மானிக்குமெனவும் அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

## இலவச படக்காட்சி

உடுவில், வெள்ளி

சுன்னுகம் பொலிஸ் போக்குவரத்துத் தலைமைப் பகுதியினர் இம்மாதம் 23ந் தேதி இலவச படக்காட்சியொன்றைக் காண்பிக்கவிருக்கின்றனர்.

இந்த இலவச படக்காட்சி உடுவில் திறந்தவெளியரங்கில் நடைபெறும்.

## அமெரிக்க ஜனதிபதி தேர்தலின் ஆரம்ப கட்டம் சூடுபிடிக்கிறது

### ஜோன்சனுக்கு எதிர்ப்பு

வாஷிங்டன், மார்ச் 15

ஜனதிபதி தேர்தலுக்கான அமெரிக்க ஜனநாயகக்கட்சியின் நியூஹாம்ப்ஷயர் முதற் கட்டத் தேர்தலில் தற்போதைய ஜனதிபதி ஜோன்சனுக்கெதிராகப் போட்டியிட்டு எதிர்பாராத அளவுக்கு வாக்குகளைப் பெற்றவரும், வியட்னும் போர் விமர்சகருமானசெனட்டர் இயூஜின் மக்கார்த்தி, ஆகஸ்டில் சிக்காகோவில் நடைபெறும் தமது கட்சிக்கான ஜனதிபதி அபேட்சகர் தேர்வில், தாம் ஜோன்சனைத் தோற்கடிப்பாரென நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமைநடைபெற்ற நியூஹாம்ப்ஷயர் தேர்தலில் ஜனதிபதி ஜோன்சனுக்கு [illegible] சதவீதமும், செனேட்டர் மக்கார்த்திக்கு 42 சதவீதமும் வாக்குகள் கிடைத்தன.

### கென்னடியும் போட்டியிடலாம்

இதற்கிடையில் இவ்வருட ஜனதிபதி தேர்தலுக்குப் போட்டியிடுவதில்லை என முன்னர் தீர்மானித்த செனேட்டர் ரொபேர்ட் எவ் கென்னடி நியூஹாம்ப்ஷயரில் ஜனதிபதி ஜோன்சனின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை மக்கள் நிராகரித்துள்ளதைத் தொடர்ந்து, தமது முடிவை மாற்றுவதுபற்றி ஆலோசித்து வருகிறார். இவரும் ஜோன்சனின் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்தவரே.



### நிக்ஸனுக்கு ஆதரவு

மறுபக்கத்தில், அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் ஜனதிபதி தேர்தலுக்கான அபேட்சகர் தேர்வில், முன்னுள் அமெரிக்க உபஜனதிபதி ரிச்சார்ட் எம். நிக்ஸன், தமது கட்சியின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சத்தியம் என்கின்ற வலுவான அத்திபாரத்தின் மேல் தான் உலகம் நிற்கிறது. அசத்தியம் என்பது இல்லாதது. ஆகையால் அதன் வெற்றிக்கு இடமேயில்லை. சத்தியம் நிலைநிற்பது. ஆகையால் அதை அழிக்கவே முடியாது.

—காந்தி மகான்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 3ந் திகதி [16-3-68]


## கல்விச்சீர்கேடு

"கல்வித்தரம் மோசமாகிவிட்டது. கல்வி அமைச்சர் உருவாக்கிய மகா வித்தியாலயங்கள் எனப்படும் கல்விக்கூடங்கள் மாட்டுக்கொட்டில்கள் அல்லாது வேறொன்றுமில்லை. கல்விநிலையங்களை அரசாங்கம் எடுத்ததிலிருந்து அவை ஒழுங்காக நிர்வகிக்கப்படவில்லை. இந்தப் பாடசாலைகளை நடத்துவதற்கு அரசாங்கம் பெரும் சிரமப்படுகிறது. கல்வித்துறையைக் கல்வி அமைச்சர் குழப்பி வைத்திருக்கிறார்."

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஓர் அரசியல் கட்சியான அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸின் தலைவரும் யாழ்ப்பாணம் பிரமுகருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தான் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியின் தலைவர் அதே அரசாங்க அமைச்சர் ஒருவர் பற்றி குறைகூறுவதற்கு தனிப்பட்ட கோபதாபம் எதுவும் இருக்க முடியாது. மூன்றுவருடங்கள் பொறுமையாக இருந்தும் கல்வித்துறை மோசமாகச் சீர்கெட்டுப் போவதைக் காணச் சகிக்கமுடியாமல் தான் திரு. பொன்னம்பலம் இப்படிக்கூறியிருக்கிறார். அவர் கூறியவற்றில் உண்மையில்லை என்று கல்வி அமைச்சர் கூட மறுப்பாரா என்பது சந்தேகம்.

நாட்டுக்கேற்ற கல்வித் திட்டம் தயாரிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு உலகநாடுகள் பலவற்றிலும் சுமார் இரண்டு மாதங்கள் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பி அவர் தயாரித்த கல்வித்திட்டம் 'மலையைக்கெல்லி எலியைப் பிடித்தகதை' யாக இருக்கின்றதே யொழிய நாட்டுக்கேற்ற திட்டம் உருவாகவுமில்லை; கல்வித்துறையில் விருத்தி ஏற்படவுமில்லை.

கல்வி அமைச்சின் குறைகள் பற்றியும் கல்விச்சீர்கேடு பற்றியும் திரு. பொன்னம்பலம் வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய பரிசளிப்பு விழாவின் பேசுகையிலேயே கருத்தும் கண்டனமும் தெரிவித்தார். இந்த வித்தியாலய பரிசளிப்பு விழாவொன்றில் திரு. பொன்னம்பலத்துடன் கல்வி அமைச்சர் திரு. இரியகொல்லை சில வருடங்களுக்கு முன்னர் கலந்து கொண்டுபேசுகையில், யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படுமென்று வாக்குறுதியளித்திருந்தார். இன்னும் எத்தனையோ வாக்குறுதிகளை அவர் சென்ற இடங்களிலெல்லாம் அள்ளி வீசினார்.

அவர்செய்த காரியங்களில் ஒன்று விஞ்ஞானக் கல்வியில் வடபகுதி முன்னேறியிருப்பதால் அந்த முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக வடபகுதியிலிருந்து சிறந்த விஞ்ஞான ஆசிரியர்களை வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்ய முன்வந்ததுதான்.

கல்வியில் இன, மத பாகுபாட்டுக்கு இடமிருக்கக் கூடாது. இன, மத அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயலாற்றும் பண்பும், சொல்வதைச் செயலாக்கும் திறனும் படைத்தவராகவும் கல்விஅமைச்சர் இருக்கவேண்டும். கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைநீக்கி அதைச் சீராக்கி தமக்கும் தகுதியிருக்கிறதென்பதை உணர்த்த திரு. இரியகொல்ல இனியாவது முயற்சிசெய்வாரென எதிர்பார்ப்போம்.

# ஸ்ரீ ராமர்பட்டாபிஷேக விழா

## அடுத்த மாதம் பெருமாள் கோயிலில் நடை பெறும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் ஸ்ரீ இராமர் பட்டாபிஷேக விழா இம்முறை சிறப்பாகக்கொண்டாடப்படுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன.

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள்கோயிலில் ஆண்டுதோறும் கம்பராமாயணப் படிப்பு நடைபெற்றுவருவதுண்டு. பங்குனி உத்தரத்தன்று ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் நடைபெறுவது வழக்கம். இம்முறை பட்டாபிஷேகத்தையொட்டி பங்குனி உத்தரத்துக்கு அடுத்த தினமான ஏப்ரல் 12ந் திகதி முழுநாள் விழா ஸ்ரீ இராமச்சந்திரமூர்த்தியின் சபா மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுவருகிறது. கவியரங்கம், பட்டிமன்றம், சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகளுடன், நாதஸ்வரக் கச்சேரி, இன்னிசை விருந்து ஆகியவைகளுக்கும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாம்.

காலை 9 மணிக்கு ஆரம்பமான நிகழ்ச்சிகள் இரவு 10 மணிவரை நடைபெறுமென்றும், விழாவுக்கு வருகைதரும் அடியார்களுக்கு அன்று நண்பகல் உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அறியப்படுகிறது.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஒரு பெருவிழாவாக நடைபெறுவது இலங்கையிலேயே இதுதான் முதல் தடவையாம்.

## மோட்டார் படகுசேவை

### காரியாதிகாரிக்கு புகார்

அனலைதீவு, வெள்ளி

"அனலைதீவிலிருந்து காலையில் புறப்படும் இரண்டு மோட்டார் படகுகளும் உரியநேரத்துக்கு முன்னரே புறப்படுகிறது. இப் போக்குவரத்துச்சேவையை சம்பந்தப்பட்டவர்கள் இப்படி நடாத்துவதால், இப்பகுதி பிரயாணிகள் மிகவும் அவதியுறவேண்டியநிலைமை அடிக்கடி ஏற்படுகிறது".

இவ்வாறு எழுதப்பட்ட கடிதமொன்றை தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. விநாயகலிங்கத்துக்கு அனலைதீவு பிரயாணிகள் சங்க காரியதரிசி திரு. பெ. துரைரசா அனுப்பிவைத்துள்ளார்.

அனலைதீவிலிருந்து காலை 7-30 மணிக்கும் 8-15 மணிக்கும் ஊர்காவற்றுறைக்குச் செல்லப் புறப்படும் 2 மோட்டார் படகுகளும் காலை 7-30 க்கும் காலை 7-45 மணிக்குமிடையில் காலவரையின்றிப் புறப்படுகிறதாகவும், இதனால் மோட்டார் படகுகளை நம்பி வரும் பிரயாணிகள் அவதியுறவேண்டியுள்ளதாகவும் பிரயாணிகள் சங்கத்துக்குக் கிடைத்த புகார்களைத் தொடர்ந்தே இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அனலைதீவு, ஊர்காவற்றுறைத் துறைமுகங்களில் பிரயாணிகள் படகு அணைக்கும்பொழுது, வேறு படகுகள் அப்பாலத்தில் அணைக்கப்பட்டிருப்பதால் பிரயாணிகள் துறைமுகத்தில் இறங்க அவதியுறவேண்டிய நிலைமை அடிக்கடி ஏற்படுவதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## இன்றைய பலன்

[16-3-68]

சனிக்கிழமை

[பங்குனி மீ 3 உ]

திதி- துதிகை இரவு 9-24 மேல் திருதிகை

நட்சத்திரம்- அத்தம் பகல் 3-26 மேல் சித்திரை

ராகுகாலம்- 9-21—10-51

சுபநேரம்- 3-21 —4-51

இன்று பிறந்தவர்களுக்கு- நீண்ட நாள் பிரச்சினைக்கு இப் பிறந்த ஆண்டில் ஒரு நல்ல முடிவு காணப்படும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருந்தால் வெற்றி உமதே. சகாக்களின் அன்புத் தொல்லையும், சம்சார பந்தமுமுண்டு. வாகனம் செலுத்துவோர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குடும்பப் பெண்களாயின் பொறுமை மிகவும் இன்றியமையாதது. நயன ரோகத்துக்கு இடமளியாது நடந்துகொள்ளவும்.

மேஷம்- கைவிட்டுப் போகும் பொருள், சிக்கனமே சிறந்தது.

ரிஷபம்- தெய்வத்தின் துணை, தேடியது கிடைக்கும்.

மிதுனம்- கடமையில் நாட்டம். கண்ணியம் சேரும்.

கடகம்- புத்திரர் புகழ் புதிய நடவடிக்கை.

சிம்மம்- தானிய நஷ்டம், தனிவழிநாட்டம்.

கன்னி- குடும்பத்தில் புயல், குன்றிவிடும் அமைதி.

துலாம்- இனிக்கும் நெஞ்சம், இல்லற இன்பம்.

விருச்சிகம்- ஏக்கத்தின் சாயல் ஏமாற்றமுண்டு.

தனுசு- அறிவுத்தாகம் அறிஞர்கள் சந்திப்பு

மகரம்- அழகின் சிரிப்பு அணைப்பின் சுகம்.

கும்பம்- தலைக்கனம் வேண்டாம், தவறிவிடும் பாதை.

மீனம்-இன்று நீ பொன்வண்டு, அழைக்கிறது காதல் பூச்செண்டு.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## அரசாங்க அதிபர் கூட்டும் மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

கச்சதீவு பற்றிய மகாநாடொன்று நாளை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது. அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா இக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். (கா. நி)

## பஸ்சேவை பற்றி மகஜர்

இமையாணன், வெள்ளி

நிறுத்திவைக்கப்பட்டுள்ள இரண்டு பஸ் சேவைகளை, தொடர்ந்து சேவையிலிடுபடுத்துமாறு கோரும் மகஜர் இ. போ. ச. வையின் யாழ்ப்பாண, பருத்தித்துறை மனேஜர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முன்பு உடுப்பிட்டி மார்க்கமாக [அல்வாய் வீதியால்] தொண்டமானாறு சென்று பின்பு திருக்கோணமலைக்கு சென்ற பஸ் சேவை இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேபோல, காலையில் கொழும்புக்குச் செல்லும் "உத்தரதேவி" புகைவண்டிப்பிரயாணிகளுக்னெவும் உடுப்பிட்டி மார்க்கமாக (அல்வாய் வீதியாக) கொடிகாமத்திற்கு ஒரு பஸ் தினமும் அதிகாலையில் சேவையிலீடுபட்டிருந்தது இந்தப் பஸ்ஸும் இப்பொழுது சேவையிலீடுபடுவதில்லை இவ்விரண்டு பஸ் சேவைகளையும் தொடர்ந்தும் நடத்துமாறு அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது. அம்மகஜரில் நூற்றுக்கணக்கான உடுப்பிட்டி மக்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

## 3 மணிக்கே வேலை முடிப்பர்

கொழும்பு, வெள்ளி

வர்த்தக வங்கி ஊழியர் நாளை துறைமுக கூட்டுத்தாபன ஊழியரின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக வழக்கமான வேலைமுடியும் நேரத்துக்கு முன்னதாக மூன்று மணிக்கே தமது வேலையை முடித்துக் கொள்வர்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் துறைமுக அங்கத்தவர்களின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக அடையாள இந் நடவடிக்கை மேற்கொள்ளப் படவிருக்கிறது. திருக்கோணமலை வர்த்தகவங்கிஊழியர் நாளைமுழு நாளும் அடையாள வேலை நிறுத்தமொன்றை மேற்கொள்வாரெனத் தெரிகிறது.

## காங்கிரஸ் வாலிப முன்னணி

யாழ்ப்பாணம், சனி

மாவட்டசபை மசோதா பற்றி இறுதி முடிவுஎடுப்பதற்கு தமிழ் காங்கிரஸ்வாலிப முன்னணிபொதுச்சபை ஏப்ரல் மாதம் 5-ம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

இக் கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், மாவட்டசபை மசோதா பற்றிய தமது கருத்தை தெரிவிப்பார் என அறியப்படுகிறது.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வவனியா எம் பி. திரு. ரி. சிவசிதம்பரம் ஆகியோரும் மாவட்டசபை மசோதா பற்றி விளக்கிக் கூறுவார்களெனத் தெரியவருகிறது.

## நாட்டிலும் நகரிலும்

சேர். பொன். இராமநாதன் இருந்தார், சேர் பொன். அருணாசலம் இருந்தார், அதி வெவரல டி. எஸ். சேனநாயகா, சேர் ஜோன் கொத்தலாவலை, திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா, உலகின் முதலாவது பெண் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா - எல்லோரும் இருந்தார்கள்.

ஆனால் எமது எமில் சவுந்தரநாயகத்தைப் போல அவர்கள் எவருக்கும் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் உலகப் பத்திரிகைகளும் இத்தனை பிரபல்யம் அளிக்கவில்லை.

சவுந்தரா சென்ற வாரம் எட்டு வருட சிறைத் தண்டனை அனுபவிக்கப் போயிருக்கிறார் லண்டனில்.

இத்தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்துள்ளார். அப்பீல் சரிவராவிட்டால் அவர் உடம்பு கெட்டு மடிந்து விடுவாரென்று லண்டனில் வாழும் அவரது மனைவி புஷ்பம் கூறுகிறார்.

சவுந்தரநாயகம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அவர் தந்தையார் ஒரு நியாயவாதி. கொழும்பு சென்ட் பீட்டர்ஸ் கல்லூரியில் பயின்ற சவுந்தரநாயகம் இரண்டாவது உலக யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்தில் கடமையாற்றி விட்டு பின்னர் வியாபாரத் துறையில் இறங்கினார்.

1950 இல் சவுந்தரா இங்கிலாந்து சென்று யாழ்ப்பாணத்துக்கு அண்மையிலுள்ள ஒரு சிறிய தீவைப் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி அதன் மூலம் கிரேக்க சுவிசேஷ சபை அவருக்கு டாக்டர் [கலாநிதி] பட்டம் வழங்கியது.

இத்தீவு அநேகமாக புங்குடுதீவாயிருக்கலாம் என்று கூறப்படுகிறது. அப்படியானால் சவுந்தராவின் ஆதி பிறப்பிடம் புங்குடுதீவாய்த்தான் இருக்க வேண்டும்.

டாக்டர் சவுந்தரா ஒரு சாதாரண பேர்வழியல்ல. அவர் ஒரு பெரிய சாணக்கியர். உலகம் எங்கும் அவருக்கு வியாபாரத் தொடர்புகள் இருந்தன. எத்தனையோ அரசாங்கங்களுடைய ஆதரவு அவருக்கு கிடைத்தன. கோடானு கோடி பணம் சம்பாதித்தார். கோடானு கோடி செலவழித்தார். லண்டன் மாநகரில் பெரிய மாளிகையும், பெரிய டாம்பீகமான கார்களும், பல வேலையாட்களும் அவருக்கிருந்தன.

மஹாராஜா போல வாழ்ந்த அவர் இன்று ஒரு வியாபார வழக்கில் சிக்குண்டு சிறைவாசம் செய்கிறார்.

ஒவ்வொருவருடைய ஆற்றலும் சிந்தனையும் எவ்வெவ் வழிகளில் செல்கின்றன?

டாக்டர் சவுந்தராவின் ஆற்றல் வேறுவழியில் திரும்பியிருந்தால் அவர் இன்று இலங்கையை மட்டுமன்றி இந்நிலவுலகத்தையே ஆட்சி புரிந்திருப்பார்.

—வழிப்போக்கன்

## போட்டி முடிவு

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் வடக்கு அம்பாள் இளைஞர் விவசாயக் கழகத்துக்கும். மாதர் சங்கத்துக்கு மிடையில் திருநெல்வேலி பிரயோக போஷணத்திட்டப் பகுதியாரால் நடாத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில், முதலாவது இடத்தை திரு. எஸ். ரி. அரசபிள்ளையும், இரண்டாவது இடத்தை திரு. வி. சண்முகலிங்கமும், மூன்றாவது ஸ்தானத்தை செல்வி பூரணச்செல்வியும் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாடசாலைகள்

# தரம் உயர்ந்தால் போதாது; கல்வித்தரமும் உயரவேண்டும்''

— எஸ். ஜே. வி.

குரும்பசிட்டி, வெள்ளி

"யாழ்ப்பாணப் பகுதியில் மட்டுமல்லாது இலங்கையிலேயே முன்னணியாக பெரும் நிலையில் மகாஜனக் கல்லூரி திகழ்கின்றது. இன்றைய நிலையில் பல்கலைக்கழக புகுமுக உயர்தரவகுப்புக்களை பாடசாலைகளில் இடம்பெற வைப்பது கஷ்டம் உயர்தர வகுப்புக்களை நிர்வகிக்கத் தேவையான பெருந் தொகைப்பணத்தை உதவக் கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை."

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெற்ற ராஜ். நகைச்சுவை நாடகமன்றத்தின் "ஊரி சிரிக்கிறது" என்ற நாடகத்தின் போது பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட காங்கேசன்துறை எம்.பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு ரி. வி. ஜெரயத்தினம்] இவ்விழாவிற்கு தலைமை வகித்தார்.

திரு. செல்வநாயகம் மேலும் கூறியதாவது:-

விஞ்ஞானம் போதிப்பதற்கு சிறந்த வசதிகள் மாணவருக்கு செய்து வைத்தல்வேண்டும். அரசாங்கத்திற்கு இவ்வகையில் மனமிருந்தாலும் பணநெருக்கடி நிலவுவதால் முடியாதிருக்கின்றது. எனவே கல்வியைப் பெரிதாக மதிக்கும் யாழ்ப்பாணத்து மக்கள் தேவையான உதவிகளை பாடசாலைகளுக்கு செய்தல் வேண்டும், பாடசாலைகளின் தரம் உயர்ந்தால் போதாது. இதற்கு பாடசாலை அதிபர் ஆசிரியர் கெட்டித்தனத்தில் தங்கியுள்ளது.

வவுனியா உள்ளூராட்சி ஆணையாளர் திரு. நல்லைநாதனும் இவ்விழாவில்பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டு உரையாற்றினர்.

## தனிநபர் கமிஷன் அறிக்கை

### மயிலிட்டி கி. ச. வில் பரிசிலனை

அளவெட்டி, வெள்ளி

மயிலிட்டி கிராமசபையின் விசேஷ கூட்டத்தில் தனிநபர் கமிஷன் சமர்ப்பித்த அறிக்கை பரிசிலனைசெய்யப்பட்டது.

மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. சி. அருணாசலம் தலைமையில் உள்ளூராட்சி அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசியால் மயிலிட்டி கிராமசபைக்கு அனுப்பப்பட்ட தனிநபர் கமிஷனுடைய அறிக்கை பரிசிலனை செய்யப்பட்டது. காங்கேசன்துறைப் பட்டின சபையை நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு ஆதரவு தெரிவிப்பதென்றும், அதேவேளையில் மயிலிட்டி கிராமசபையின் சில வட்டாரங்களைப் பிரித்துப் பட்டினசபையுடன் சேர்த்து நகரசபையாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

மயிலிட்டி கிராமசபையை இரு கிராமசபைகளாகப் பிரிக்கும்படி மீண்டும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## துண்டுப்பிரசுர வழக்கு

யாழ்ப்பாணம், சனி

ஒன்பதாவது தவணையாகியும் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாததை துண்டுப்பிரசுர வழக்கில் சந்தேக நபர் சார்பில் ஆஜரான அட்வகேட் கே. வைகுந்தவாசன், யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜாமாலின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

கொகிலங்கலட்டியைச் சேர்ந்த கே. சிவதாசன் என்பவர் துண்டுப்பிரசுரங்கள் வைத்திருந்ததாக, பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடப்பட்டிருந்தார் நேற்று சுகவீனம் காரணமாக சந்தேகநபர் கோர்ட்டில் ஆஜராகவில்லை.

சந்தேகநபர் சார்பில் அட்வகேட் கே வைகுந்தவாசன் புறக்டர்களான எஸ். அமிர்தலிங்கம், ஏ. அன்ரனி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

இவ்விஜயமாக விபரமறியும்படி கோர்ட்டிற்கு தெரிவித்த மாஜிஸ்திரேட் விசாரணையை அடுத்த மாதம் 6-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## "நான்படித்து சுவைத்தநூல்'

யாழ்ப்பாணம், சனி

"நான்படித்துச் சுவைத்த அண்மைக்கால நூல்" என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கம் இம்மாதம் 22-ம் திகதி யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெறவுள்ளது

இக்கருத்தரங்கில் கட்டுரை, சிறுகதை, நாவல், கவிதை, குழந்தை இலக்கியம் என்ற தனித்தனி துறையில் ஒவ்வொருவர் பேசுவார்கள்.

இரசிகமணி கனக செந்திநாதன், இ. நாகராஜன், திரு. மு. கனகராஜன், திரு. சுந்தரம்பிள்ளை, க. சபாரத்தினம்[சபாரதி] ஆகியோர் இக்கருத்தரங்கில் பங்குபற்றுவார்கள். (நி)

## அனலைதீவில் நெசவு நிலையம்

### கி. மு. சங்கம் ஏற்பாடு

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவில் மிக விரைவில் ஒரு நெசவு நிலையம் அமைக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது. அனலைதீவு கிராம முன்னேற்றச் சங்கம் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியால் அரசினரிடமிருந்து பெறப்பட்ட சிறு கைத் தொழில் கட்டிட நிதிக்கான ரூபா 2000 மும் நெசவு நிலையக் கட்டிட ஆக்க வேலையில் ஈடுபடுத்தித் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

1965-ம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியால் இங்கிருந்த நெசவு நிலையக் கட்டிடம் அழிந்து விட்டதாகவும், இதையடுத்து நிலையம் மூடப்பட்டதாகவும், அனலைதீவில் உடனடியாக நெசவு நிலையம் அமைத்துத் தரும்படியும் அனலைதீவு கிராம முன்னேற்றச் சங்கத்தினரும், அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தினரும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

தற்சமயம் அரசினரிடமிருந்து பெறப்பட்ட பணம் போதாது ஆகையால் அனலைதீவு கிராமசபையிடமிருந்தும். மற்றைய பொதுச் சங்கங்களிடமிருந்தும் உதவி பெற முயற்சிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது

## கத்திவெட்டுக்கு ஒருவர் பலி

நல்லூர். வெள்ளி

கத்தி வெட்டுக் காயங்களுக்குள்ளானவர் ஸ்தலத்திலேயே மரணமானர். இச்சம்பவம் நேற்று இரவு சங்கானை கிழானில் நடைபெற்றுள்ளது.

கந்தன் சின்னப்பொடி என்பவரே காலமானவராவர். குடும்பச் சண்டை காரணமாக ஏற்பட்ட தகராறில் இவர் கத்தி வெட்டுக் காயங்களுக்குள்ளானரெனப் பொலிஸ்விசாரணையில் தெரிய வந்துள்ளது. சந்தேகத்தின் பேரில் கதிரன் இராமன் என்பவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. ரனல்ட் மெண்டிஸ் புலன் விசாரணை நடத்தி வருகிறார்.

## உபசபாநாயகருக்கு வரவேற்பு

இமையாணன், வெள்ளி

உடுப்பிட்டித் தொகுதியின் காங்கிரஸ் கட்சியின் நிர்வாக சபைக் கூட்டம் நெல்லியடியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஏகமனதாகப் போட்டியின்றி, உபசபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்திற்கு 27-ம் திகதி மாலிச்சந்திப் பிள்ளையார் கோவிலில் வரவேற்புக் கூட்டமொன்றை நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு சபாநாயகர் ஷேர்லி கொரியா, யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள் எனத் தெரிய வருகிறது.

## ஆசிரியர் பற்றுக்குறை

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

கடந்த தை மாதம்நடந்த ஆசிரியர் இடமாற்றம் காரணமாக பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. இவ்விடங்களை எதிர்காலத்தில் நிரப்புவது சந்தேகம் எனத்தெரிகிறது.

வரணிப் பகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலையொன்று கடந்த மூன்று மாதங்களாக ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமலே இயங்கிவருகிறது.

## சிரமதானம்

சங்கானை. வெள்ளி

சங்கானை இந்து இளைஞர் சங்கத்தினர் பட்டின சபை ஊழியர் உதவியுடன் சிரமதான மூலம் மயானமொன்றைச் சுத்திகரித்தனர்.

கடந்த புதன்கிழமை வராச்சி வெளியில் நடைபெற்ற சிரமதான மூலம் சரிப்பங்களும் விஷஜந்துக்களும் குடிகொண்டிருந்த சங்கானை மயானம் சிறந்த முறையில் சுத்திகரிக்கப்பட்டது.

## மாதர் கழகம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், சனி

புனிதவளான் மாதர் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் வண. பிதா பெனெற் கொன்ஸ்ரன்ரைன் தலைமையில் நாளை மாலை புனிதவளன் விளையாட்டுக் கழகத்தில் நடைபெறும். திருமதி வேதவல்லி கந்தையா கூட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைப்பார். திரு. இ. கே. குமரையா, திருமதி சனிரிமுத்து மாகிறேற், செல்வி க. பூரணம் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

# ஜி. ஜி. க்கு யோசனை கூறியது தூது கோஷ்டி

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 15 ஸ்தலஸ்தாபன சபைத் தலைவர்கள் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைச் சந்தித்து மாவட்ட சபை பற்றிய தங்கள் கருத்தைத் தெரித்தனர்.

மாவட்டசபைக்குப் பாதகமான கருத்தைப் பலர் தெரிவித்ததாகவும், சிலர் நடுநிலைமை வகிக்கும்படி திரு. பொன்னம்பலத்திடம் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

மாவட்டசபை மசோதாவிற்கு ஆதரவாகவோ, எதிராகவோ, வாக்களிக்காவிடில் தொடர்ந்து அரசாங்கத்திலிருந்து சேவை செய்யலாமென கிராமசபை தலைவர் ஒருவர் கருத்து தெரிவித்ததாக அறியப்படுகிறது.

மாவட்டசபை மசோதாவிற்கு எதிராக வாக்களிக்காமல் இருந்தால் இந்துப் பல்கலைக்கழகம் பெற ஒரு சந்தர்ப்பம் கிடைக்கலாம் என ஒருவர் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

இவ் விஷயம் பற்றி தமிழ் காங்கிரஸ் செயல் கமிட்டியில் தீர்மானிப்பதென முடிவு செய்யப்பட்டதாம்.

யாழ் மாவட்ட

## 4 கிராம சபைகளின்கால எல்லைமேலும்நீடிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டத்தில் மேலும் நாலு கிராம சபைகளின் காலஎல்லை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் விசேஷ கஸட் மூலம் அறிவித்துள்ளார்.

பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, நாரந்தனை, வேலணை ஆகிய கிராமசபைகளே காலஎல்லை கூட்டப்பட்டுள்ளன. இவைகளின் ஆயுட்காலம் இவ்வருடம் டிசம்பர் மாதம் 31-ம் திகதி வரை அதிகரிக்கப்பட்டுள்ளது இவைகளுக்கான புதிய தேர்தலுக்கு அபேட்சகர்கள் நியமனப்பத்திரம் இம்மாத மத்தியில் நடைபெறவிருந்ததை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே காலஎல்லை கூட்டப்பட்ட கோப்பாய், அல்லைப்பிட்டி கிராமசபைகளுடன் இதுவரை யாழ். மாவட்டத்தில் 6 கிராம சபைகளின் ஆயுட்காலம் இவ்வருடத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. (கா. நி.)

# வடபகுதிசிறுபான்மை தமிழர் பிரச்னை

## நுவரெலியாவில் தேரோ பேச்சு

நுவரேலியா, வெள்ளி

"வடபகுதியில் தீண்டாமைப் பிரச்னையால், தமிழர்கள் பிளவுபட்டிருக்கிறார்கள். இப்பிரச்னையால் சிலர் உயிரைக்கூடத் தியாகம் செய்திருக்கின்றனர். இந்த நாட்டில் தீண்டாமைப் பிரச்னையை நீடிப்பதில் ஆர்வம் உள்ளவர்கள் இருப்பது கவலைக்குரிய விஷயமாகும்."

நுவரேலியா வை. எம். பி. ஏ மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் பம்பலப்பிட்டியைச் சேர்ந்த வண. நாரத மகாதேரோ பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

மகாதேரோ மேலும் பேசுகையில் கூறியதாவது:

"வடபகுதிக்கு விஜயஞ்செய்த பௌத்த பிக்குகள் கோஷ்டி, சிறுபான்மைத் தமிழர்களின் குழந்தைகளுக்காக 3 பாடசாலைகளை ஆரம்பித்து சிங்களம், தமிழ், பௌத்தம் ஆகியவற்றைப் போதிக்க ஏற்பாடுசெய்தது. துரதிர்ஷ்டவசமாகக் கல்வி இலாகா, இப்பாடசாலைகளைப் பதிவு செய்யவில்லை. தமிழர்களில் ஒருபகுதியினர் தீண்டாமைப் பிரச்னை தீர்க்கப்படுவதை விரும்பவில்லையென்பதை எடுத்துக்காட்டுகின்றது.

சிறுபான்மைத் தமிழர்களின் நலவுரிமைகள் பாதுகாக்கப்படுவது பற்றி பிக்குகள் அக்கறைகொண்டு திட்டம் தயாரித்துள்ளனர். சிறுபான்மைத் தமிழர்களுக்குச் சம உரிமை வழங்க மறுப்பது வருந்தக்கூடியது.

சிறுபான்மைத் தமிழர்களுக்காக ஏப்ரல் மாதம் 5ந் தேதி சங்கானையில் ஒரு பௌத்த விகாரையை ஆரம்பித்து வைப்பதற்காக நான் வடபகுதிக்கு விஜயஞ் செய்யவிருக்கிறேன். தீண்டாமைக்கு எதிராக முதலில் பிரசாரஞ்செய்தவர் புத்தராகும்." ——

## யாழ். பொலிஸ் நிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய ஊழியர்களின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் இங்கு நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. மாணிக்கம் [தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர்] உப தலைவர்- இன்ஸ்பெக்டர்- திரு. இராமநாதன். செயலாளர்- திரு. ஜெஜி சண்முகராஜா, நிர்வாக உறுப்பினர்களாக பொலிஸ் சார்ஜன்டுகளான திருவாளர்கள் சில்வா, இரத்தினசிங்கம், சமரக்கோன் ஆகியோரும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான திருவாளர்கள் குணசேகரா, சில்வா, பண்டா, முனசிங்கா, அந்திரியாஸ் ஆகியோரும் தெரியப்பட்டனர். (கா. நி.)

## தொழிலாளர் பிரச்னை

திருக்கோணமலை, வெள்ளி

உப்புவெளி அரசாங்க கிருஷிகப் பண்ணை முகாமையாளருக்கும் பண்ணைத் தொழிலாளருக்குமிடையிலுள்ள தகராறை தீர்த்து வைத்து தொழிலாளி அதிகாரி நல்லுறவை ஏற்படுத்திவைக்குமாறு யாழ்ப்பாணம் நிர்வாக அதிகாரியிடம் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுவிஷயத்தில் உடனடித் தீர்வு காணுமுகமாக சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவும்ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பலரை உருவாக்கிய பெருமை அ.ந.க.வுக்குண்டு"

யாழ்ப்பாணம், சனி

"காலஞ்சென்ற திரு. அ. ந. கந்தசாமி இலக்கியத்தின் பல துறைகளிலும் சிறந்த ஆற்றல் மிக்கவராக விளங்கினார். இது மாத்திரமன்றி ஈழத்தின் இலக்கியத் துறையில் இன்று புகழுடன் விளங்கும் பலரை உருவாக்கிய பெருமையும் இவருக்குண்டு. எங்கு இருந்தாலும் சிறந்தவைகளைப்பாராட்டும் பண்பு இவரிடம் நிறைய இருந்தது."

இவ்வாறு காலஞ் சென்ற பிரபல எழுத்தாளர் திரு. அ. ந. கந்தசாமியின் மறைவு குறித்து கலை இலக்கியப் பெருமன்றத்தின் ஆதரவில் நேற்று முன்தினம் நல்லூரில் நடைபெற்ற அனுதாபக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், திரு. மாசுவி குறிப்பிட்டார்.

திரு. டொமினிக்ஜீவா பேசுகையில் "கேரள எழுத்தாளர்கள் அவர்களது நூல்களை வெளியிடக்கூட்டுறவுப் பதிப்பகம் ஒன்றை நடாத்துவதுபோல ஈழத்திலும் ஒரு கூட்டுறவுப் பதிப்பகம் அமைக்கவேண்டியது அவசியமாகும். இது மாத்திரமன்றி யாழ்ப்பாணத்திலுள்ள எழுத்தாளர்கள் சந்திக்கவும், கருத்துப் பரிமாறல்களைச் செய்யவும் ஒரு இடம் இல்லாததும் பெருங்குறையாகும். இதனை போக்க எழுத்தாளர்கள் ஒற்றுமைப்பட்டு முன்வரல் வேண்டும்" என்றார்.

கவிஞர் சுந்தவனம் பேசுகையில், நாடகத்தில் சுத்தமான தமிழை உபயோகப் படுத்தி வெற்றி கண்டவர் அ. ந. க. என்றும், இவரது 'மதமாற்றம்' என்ற நாடகம் சிறப்புப் பெற்றது என்றும் சொன்னார். புலவர் பார்வதிநாதசிவம் பேசுகையில் எழுத்தாளனுடைய மனமும் சிந்தனையும் உயர்ந்த நோக்குள்ளதாக இருக்கவேண்டுமென்றும், அவன் நல்ல பண்பாளனாக இருந்தால்தான் அவனது படைப்புகள் சிறந்தனவாக இருக்குமென்றும் சொன்னார். (கா. நி)

மாஜிபொலிஸ் கான்ஸ்டபிள் கொலைவழக்கு

# 'மூளை சிதறி விலா எலும்பு முறிந்து போயிருந்தது'

குரும்பசிட்டி, வெள்ளி

இளவாலை மாஜி பொலிஸ் கான்ஸ்டபிள் கொலை வழக்கு மீண்டும் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டபோது காலஞ்சென்றவரை பிரேதபரிசோதனை நடாத்திய மாவட்ட வைத்திய அதிகாரி சாட்சியமளித்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் சாட்சி குறுக்குவிசாரணையும் செய்யப்பட்டார்.

வைத்திய அதிகாரிதமது சாட்சியத்தில் கூறியதாவது:-

இறந்தவரது உடலில் 9 வெளிப்புறக் காயங்களும் 9 உட்காயங்களும் பரிசோதனையின்போது காணப்பட்டன. அவற்றில் வெளிக்காயங்களில் 7 பொல்லினால் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்டு இருக்கலாம். மற்றைய இரண்டும் நிலத்தில் வீழ்ந்ததால் ஏற்பட்டுள்ளதாக இருக்கலாம் காலஞ்சென்றவரது மண்டையோடு உடைந்திருந்தது மூளை சிதறிய நிலையிலிருந்தது. உடம்பின்விலா எலும்புகள் உடைந்து முறிந்து போய்க் காணப்பட்டன.

இளவாலையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் என்பவரை இவ்வருடம் தை மாதம் 1ம் திகதி கொலை செய்ததாக எஸ். அந்தோனிப்பிள்ளை ஏ. யேசுதாசன் ஏ. ஜெயரத்தினம் ஆகிய மூவர் மீதும் காங்கேசன்துறைப் பொலிஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

விசாரணையின் பின் நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைத்து எதிரிகளைத் தொடர்ந்து றிமாண்டில் இருக்க உத்தரவிட்டுள்ளார்.

## 'இலக்கணசந்திரிகை' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், சனி

சுன்னுகம் குமாரசாமிப் புலவர் எழுதிய 'இலக்கண சந்திரிகை' என்னும் நூல் மல்லாகம் பண்டித மாணவர் கழகத்தினரால் இம்மாதம் 21-ந் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் வெளியிடப்படவுள்ளது. வடமாநிலக் கல்வியதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பேராசிரியர் அ. சின்னத்தம்பி, கலாநிதி ஆ. சதாசிவம், புலவர் சிகாமணி வ. மு. இரத்தினேஸ்வர ஐயர். பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை, பண்டிதர் சோ. இளமுருகனார், வித்தியாலய அதிபர் ச. அம்பிகைபாகன்முதலியோரும் கலந்துகொள்வர் என அறியப்படுகிறது.

## "கலையைப் பிரித்தால் தனித்துவமில்லை"

வெள்ளவத்தை, வெள்ளி

"கர்நாடக சங்கீதம்" உலக அரங்கில் இந்தியக் கலையாகவும், இந்தியாவில் தென்னிந்தியக் கலையாகவும் ஈழத்தில் தமிழ் மக்களின் கலையாகவும் கருதப்படுகின்றது. எனினும் இசைக்கலையின் தமிழ்த் தன்மைகளைச் சாதாரண தமிழ் மக்கள் உணர முடியாதவாறு, இன்றைய கர்நாடக சங்கீதம் தென்னிந்தியாவிலிருந்து இங்குவந்த பொருள்போலாயிற்று. எமது சிந்தனைகளையும், இலட்சியங்களையும் எமக்கு விளங்கும் முறையில் எமது பாரம்பரியத்திற்கேற்ப எடுத்துக் கூறுவதே கலையின் முக்கிய பணியாக, என்றும் இருந்தது. எம்மிலிருந்து கலையைப் பிரித்தால் எமக்கும் தனித்துவமில்லை! கலைக்கும் உயிரில்லை. இசைக்கலை இதற்கு விலக்கல்ல."

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற ஈழத்து இசைக்கலைஞர் சங்கீதபூஷணம் திரு. எம். ஏ. குலசீலநாதனின் இன்னிசைக் கச்சேரியின் போது தமிழ்க்கலை அரங்கம் மேற்கண்ட கருத்தை வெளியிட்டது.

## கல்வி மந்திரிக்கு மகஜர்

சுழிபுரம், வெள்ளி

"தொழில் நுட்பக் கல்லூரியில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு ஞான சித்தி கொடுக்க வேண்டும். இதனால் வர்த்தக பாடம் கற்ற மாணவர்கள் அதிக நன்மையடைவார்கள்" எனக் கோரும் மகஜர் ஒன்றை கல்வி அமைச்சருக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி வர்த்தக கழகமன்றத்தினர் அனுப்பி வைத்துள்ளனர்.

## நிவாரண மதிப்பீடு

அச்சுவேலி, வெள்ளி

அண்மையில் நடைபெற்ற வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டோரின் விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் அச்சுவேலிப் பகுதியில் சமூகசேவைப் பகுதியினராலும், அவ்வப் பகுதி கிராம சேவகர்களாலும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. இப்பகுதியில் சுமார் 200 குடும்பங்கள் நிவாரணம் கோரியுள்ளனராம்.

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றும் திரு. குமரேசர் சோமசுந்தரம் சுருக்கெழுத்தாளர் சேவையில் விசேஷ பிரிவிற்குப் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளார். இப்பதவி உயர்வைத் தொடர்ந்து இவர் கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

## இளம்பெண் தற்கொலை

வவுனியா, வெள்ளி

வவுனியாவைச் சேர்ந்த அ. புஸ்பராணி (வயது 19) என்பவர் ரயில்முன் விழுந்து மரணமானார். முல்லைத்தீவுக்குப்போக அனுமதி கேட்டபோது அவரது தந்தையார் அனுமதி கொடுக்க மறுத்ததாகவும், அதன்பின்னரே இவர் ரயில்முன் விழுந்திருக்கக் கூடுமென்றும் சாட்சியமளித்த பெண்ணின் தந்தையார் தெரிவித்தார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆ. செல்வராஜா மரணவிசாரணை நடத்தி, தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். ரயில் என்ஜின் சாரதியும் சாட்சியமளித்தார்.

## தமிழிலும் 'சியவச'

கொம்பனித்தெரு, வியா.

1969-ம் ஆண்டு கொண்டாடப்படவிருக்கும் கல்வித்திணைக்கள நூற்றுண்டு விழாவின் ஞாபகார்த்த வெளியீடாக இப்பொழுதிருந்தே 'நூற்றுண்டுவிழா' என்று பொறிக்கப்பட்ட கடித உறைகளைக் கல்வி இலாகா உபயோகத்துக்கு விட்டுள்ளது.

சிங்களத்தில் 'சியவச' என்று பொறிக்கப்பட்டது மாதிரியே தமிழிலும், ஆங்கிலத்திலும் 'சியவச' என்று பொறிக்கப் பட்டுள்ளது.

## அபினும் கஞ்சாவும்

### ஒருவர் கைது

யாழ்ப்பாணம், சனி

சட்டவிரோதமாக கஞ்சாவையும், அபினையும் வைத்திருந்ததாகவும் பொலிஸ் கோஷ்டியொன்று நேற்று இலைகளைப் கைப்பற்றியதாகவும் தெரியவருகிறது.

பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து சப் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். பி. ஜெயசிங்கா தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டி வண்ணார்பண்ணையில் இதனைக் கைப்பற்றினார்களாம். இங்கிருந்து சுமார் 10,000 கிரேன் நிறையுள்ள கஞ்சாவும், சுமார் 2000 நிறையுள்ள அபினையும் பொலிசார் கைப்பற்றினார்கள். [illegible] பொலிஸார் கைது செய்து

# 5 வட்டாரங்களில் போட்டியின்றி தெரிவு

## தெல்லிப்பளை கி. ச. தேர்தல்

குரும்பசிட்டி, வெள்ளி

தெல்லிப்பளை கிராம சபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் திரு. எம். இராஜசிங்கம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன.

ஐந்து வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர். 19 வட்டாரங்களிலும் போட்டியிடும் அபேட்சகர்கள் விபரம் வருமாறு-

1-ம் வட்டாரம்- எஸ். அருளானந்தம், ஜே. இராசநாயகம்.

2-ம் வட்டாரம்- எம். கந்தையா, ஜே. அந்தோனிலாசரஸ்.

3-ம் வட்டாரம்- வி. நாகராசா, இ. நரசிங்கம், பி. கனகராசா.

4-ம் வட்டாரம்- ஏ. சின்னத்தம்பி, என். நடுவிலார்.

5-ம் வட்டாரம்- வி. திருநாவுக்கரசு, எஸ். கந்தையா, எஸ். பத்திநாதர்.

6-ம் வட்டாரம்- எஸ். கதிர்காமத்தம்பி, வி. வன்னியசிங்கம்.

7-ம் வட்டாரம்- எஸ். சின்னத்துரை, எஸ். கந்தசாமி. டி. செல்வரத்தினம், கே. சிவராசா.

8-ம் வட்டாரம்- வி. நடராசா [போட்டியில்லை].

9-ம் வட்டாரம்- எஸ். கந்தசாமி (போட்டியில்லை)

10-ம் வட்டாரம்- எஸ். அடைக்கலமுத்து. எஸ். நாகலிங்கம்பிள்ளை.

11-ம் வட்டாரம்- எஸ். நாகலிங்கம் (போட்டியில்லை).

12-ம் வட்டாரம்- ச. நாகேந்திரன், ஏ. தில்லைநாயகம்.

13-ம வட்டாரம்- எம். சிதம்பரநாதன், கே. மாரிமுத்தன்.

14-ம் வட்டாரம்- டி. மாசிலாமணி, எஸ். செல்வராசா.

15-ம் வட்டாரம்- எஸ். பசுபதி (போட்டியில்லை).

16-ம் வட்டாரம்- எஸ். செல்வராசா, பி. மாணிக்கவாசகர்.

17-ம் வட்டாரம்- எஸ். பொன்னையா, எஸ். சபாபதி.

18-ம் வட்டாரம்- ஏ. கதிரிப்பிள்ளை (போட்டியில்லை).

19-வட்டாரம்- எஸ். சபாநாதன், எஸ். தங்கவேலு, எம். தர்மலிங்கம், வி. செல்லத்துரை.

[நேற்றைய ஈழநாட்டில் வெளிவந்த இச்செய்தியில் சில தவறுகள் ஏற்பட்டுவிட்டன].

# நயினாதீவு கி. ச. தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்

## மூவர் போட்டியின்றி தெரிவு

நயினாதீவு, வெள்ளி

நயினாதீவு கிராம சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நேற்று தேர்தல் அதிகாரியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மூவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். போட்டியிடுவோர் விபரம் பின் வருமாறு:—

1 ம்- வட்டாரம்:- த. நாகேசு, க. துரைமணி, க. சரவணமுத்து.

2ம்- வட்டாரம்:- இ. சின்னத்துரை, வே. வைத்திலிங்கம், ஆ. கிருஷ்ணபிள்ளை.

3ம்-வட்டாரம்:- கு. கோபாலபிள்ளை (போட்டியில்லை)

4ம்-வட்டாரம்:- மு. சின்னையா (போட்டியில்லை)

5ம்- வட்டாரம்;- வி. கந்தசாமி, கா. பொ. இரத்தினசபாபதி.

5'ஏ'-வட்டாரம்;- அ. நல்லையா, வ. கனகசபை.

6ம்-வட்டாரம்:- கா. ஆறுமுகம், இ. கனசசபை.

7ம்-வட்டாரம்:- சி. க. தம்பையா, சி. க. பொன்னையா, பொ. கணபதிப்பிள்ளை, நா. கிருஷ்ணன், மு. நவரத்தினம்,

8ம்- வட்டாரம்:- கி. நா. மதியாபரணம் [போட்டியில்லை]

## எதிரி குற்றவாளி

### தீர்ப்பு 24-ல்

வல்வெட்டித்துறை, வெள்ளி

கெருடாவிலைச் சேர்ந்த கந்தசாமி குலவீரசிங்கம்என்பவர் துரையப்பா வீரசிங்கத்தை கத்தியால் குத்தி காயப் படுத்தியதாக வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்ரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்புக் கூறுவதை இம் மாதம் 24-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் முன்னிலையில் ஆஜர் செய்தனர், சந்தேக நபரை 2000 ரூபா பிணையில் விடுதலை செய்ய அனுமதித்த மாஜிஸ்டிரேட் மீண்டும் இம் மாதம் 30-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தர விட்டார், (கா. நி)

பொலிஸ்

## இன்ஸ்பெக்டர்கள் இடமாற்றம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி எல். விஜயதிலகா கிளிநொச்சி பொலிஸ்நிலையத்திற்கும், ஆனைக்கோட்டை பொலிஸ்சப் இன்ஸ்பெக்டர் திரு. வியனகே வல்வெட்டித்துறை பொலிஸ்நிலையத்துக்கும் கிளிநொச்சி பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. பி. இராஜேஸ்வரன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கும் இம்மாதம் 15-ம் திகதிதொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் இ. போ. ச. பஸ்நிலையத்தைச் சேர்ந்த திரு. ஏ. இரத்தினம் என்பவரால் ஒரு கூப்பனும், பங்கீட்டு அட்டையும் பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செய்திச் சுருக்கம்

### ஆலயப்பிரவேசம் அவசியமில்லை

மட்டக்களப்புப் பகுதி ஆலயங்களில் ஆலயப்பிரவேச இயக்கம் நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை. பல வருடங்களுக்கு முன்பே மட்டக்களப்பு ஆலயங்களின் திருக்கதவுகள் சகல மக்களின் வழிபாட்டிற்கும் திறக்கப்பட்டுள்ளன. அதற்கென அக்காலங்களில் அஹிம்சை முறையான இயக்கங்கள் நடத்தப்பட்டு அவை திறக்கப்பட்டன என்று மட்டக்களப்பு எம். பி. திரு. எஸ். இராசதுரை வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

ஃ ஃ

### 'தமிழருக்கு உயர் பதவி'

'உதிதேச மாவட்டசபை மசோதா சிங்கள மக்களுடைய உரிமைகளுக்குப் படிப்படியாக சாவுமணியடிக்கும் ஒரு திட்டமாகும். சிங்களவரின் எதிர்கால முன்னேற்றத்திற்கு இத்திட்டம் ஒரு பெரும் தடைக்கல்' என்று தம்பதேனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா மீவேவ என்னுமிடத்தில் நடந்த சுதந்திரக்கட்சி கிளைக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

பௌத்தர்களின் புனித நகர்களில் ஒன்ருகக் கருதக்கூடிய கண்டியிலுள்ள எல்லா அரசாங்க அலுவலகங்களிலிருக்கும் உயர் பதவிகளை தமிழர்கள் கைப்பற்றிக்கொண்டனர். சிங்கள மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வருவதற்கு இது சான்ருகும்.

ஃ ஃ

### அடிப்படை வசதிகள்

தனியார் துறையைச் சேர்ந்த தொழிற்சாலைகள், வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு கட்டாயப்படுத்துவதற்கான சட்டம் ஒன்று விரைவில் தொழில் மந்திரி அல்ஹாஜ் எம். ஏச். முகம்மதினுல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

ஃ ஃ

### சுருக்கிட்டு தற்கொலை

லோனுக் கோட்டத்தைச் சேர்ந்த 19 வயதுடைய பெண் தொழிலாளி செபமாலை ஐயன் வீட்டுக்குப் பின்புறத்தில் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார். கடந்த சில வருடங்களாக நெஞ்சில் ஏற்பட்டிருந்த நோவு காரணமாக வாழ்க்கையில் வெறுப்படைந்து எட்டு மாதங்களுக்கு முன்னரும் தற்கொலை செய்ய முயற்சித்ததாக மரணவிசாரணையின்போது தெரியவந்தது. மரணவிசாரணை அதிகாரி காமினி ஜினதாசா தற்கொலை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

ஃ ஃ

### சம்பள கமிஷன்

அரசாங்க தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமுகமாகவும், தற்போதுள்ள அடிப்படை சம்பள வேறுபாடுகளை நீக்குமுகமாகவும் புதியதொரு சம்பளக்கமிஷனை அரசாங்கம் நியமித்திருக்கிறது. 1958-ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட வில்மட் பெரேரா சம்பளக் கமிஷன் அறிக்கையில் அடங்கியுள்ள சிபார்சுகளையும் அடிப்படையாகக் கொண்டு தற்போதைய சம்பள முறைகளை ஆராய்வதற்குரிய முறையில் இக்கமிஷன் நியமிக்கப்படுமெனத் தெரிகிறது.

ஃ ஃ

### 'சிங்களவருக்கு எதிரானது'

பெண்கள் கைகளிலேயிருக்கும் தங்கத்தைப் போல் தமிழரசாரி கைகளிலே கிடந்து தேசிய அரசாங்கம் தவிக்கிறது. எந்த முடிவு எடுத்தாலும் அது சிங்களவருக்கு எதிராயும், தமிழருக்கு நன்மையாகவுமே இருக்கிறது. இதில் தலைசிறந்தது மாவட்டசபைகள் அமைப்பது. இதை என் பிணத்தின் மீதுதான் அமைக்க முடியும் என்று வெலிமடையில் நடந்த பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசும்போது கூறினர்.

ஃ ஃ ஃ

### உணவுமந்திரி விஜயம்

மட்டக்களப்பிற்கு உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா இம்மாதம் 16-ம் திகதி விஜயம் செய்வார். கல்குடா பாராளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு சமாஜத் தலைவருமான திரு. கே. டபிள்யூ தேவநாயகத்தின் அழைப்பின் பேரில் விஜயம் செய்யும் அமைச்சருக்கு மட்டக்களப்பு கூட்டுறவாளர்களால் வரவேற்பு அளிக்கப்படும்.

ஃ ஃ

### தற்கொலை முயற்சி

என்னுல் என் மனைவி மக்கள் தாய் தந்தை ஆகிய ஐவரையும் காப்பாற்ற முடியவில்லை நான் 50 ரூபா மாதம் சம்பாதிக்கிறேன். ஆகவே வாழ்ந்து பிரயோசனமில்லை என்றுதான் தற்கொலை செய்கிறேன் என்று ஒரு வாலிபர் பதுளைப் பொலிஸில் வாக்குமூலம் அளித்தார். விஷமருந்தி தற்கொலை செய்துகொள்ள முயன்ற அவர் பதுளைப் பெரியாஸ்பத்திரியில் கவலைக்கிடமான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

### இரகசிய ஒப்பந்தம்

பிரதமர்டட்லி சேனநாயக்காவுக்கும் தமிழரசாருக்குமிடையில் ஒரு இரகசிய ஒப்பந்தம் இருப்பது உண்மைதானென்றும் வடக்கு, கிழக்கு பகுதிகளை முழுக்கமுழுக்க தமிழர்களுக்குக் கொடுக்க அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிடிப்பதாகவும் சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா பதுளையில்நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பேசும்போது கூறினர்.

---

## சென்றல்-சென்.ஜோன்ஸ்மோதல்

### ரசிகர்கள் ஆவல் அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், சனி

பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வடக்கின் பெரிய கிரிக்கெட் மோதலான சென்றல்-சென். ஜோன்ஸ் மோதல் இம் மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. போட்டிக்கான காலமும் நெருங்க நெருங்க யாழ்ப்பாண ரசிகர்களின் உற்சாகமும், ஆவலும் அதிகரித்துக் கொண்டு வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இம் முறை போட்டி சென்றல் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த வருடப் பருவத்திலான, நடைபெற்று முடிந்த போட்டிகளில் சென்-ஜோன்ஸ் இதுவரை தோற்கடிக்கப்படாத ஒரு கோஷ்டியாக முன்னணியில் திகழுகிறது. ஹாட்லிக் கல்லூரியுடன் சமமாக ஆட்டத்தை முடித்துக் கொண்ட சென் ஜோன்ஸ், யாழ்ப்பாணக் கல்லூரி, கண்டி சென். சில்வஸ்ரர், மானிப்பாய் இந்து ஆகிய கல்லூரிகளைத் தோற்கடித்துள்ளது.

(வி. நி)

---

### பறக்கும் இளைஞர்க்கு வெற்றிக்கேடயம்

குரும்பசிட்டி, வெள்ளி

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினரின் 10வது உதைபந்தாட்டச் சிற்றுப்போட்டியில் முதற் பிரிவுக்கோஷ்டி ஈவினை பறக்கும் இளைஞர் விளையாட்டுக் கழகம்'சிங்கராஜா'வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையமும், ஈவினை பறக்கும்இளைஞர் விளையாட்டுக்கழகமும் கலந்து கொண்ட இச்சாம்பியன் போட்டியில் ஈவினை கோஷ்டி 7-4 கோல்களால் வெற்றியீட்டியது.

---

### வெற்றி தோல்வியில்லை

குரும்பசிட்டி, வெள்ளி

குரும்பசிட்டி உதயதாரகை இளைஞர் சங்கத்திற்கும் கோண்டாவில் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இப்போட்டி குரும்பசிட்டி விளையாட்டுத்திடலில் நடைபெற்றது.

---

### அளவெட்டி வெற்றி

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்துக்கும், மாதகல் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் மாதகல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் அளவெட்டிக் கோஷ்டியினர் 5விக்கட்டுகளாலும் 5 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றனர்.

---

### இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**சனி 16-3-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 நிகழ்ச்சிக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்— வானெலி அண்ணு.

இரவு 6-15 பாட்டு — ஜெயலட்சுமி நடராசாமூர்த்தி, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பாட்டு — [illegible]

---

## வடமராட்சி ஆசிரியர் சங்க பேச்சு, இசை போட்டிமுடிவுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சி ஆசிரியர்சங்கம் வடமராட்சிப் பாடசாலைகளுக்கிடையே நடாத்திய தமிழ் ஆங்கில பேச்சுப் போட்டி இசைப்போட்டிகள் நெல்லியடி அரசினர் மத்தியமகா வித்தியாலயம் மண்டபத்தில் நடைபெற்றது. போட்டி முடிவுகள் வருமாறு:-

ஆங்கிலப் பேச்சுப்போட்டி(ஆண்கள்) கீழ்ப்பிரிவு ஜெ. ஆர். ஜெபசீலன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ஜேகன்பிளான்சன்ட் [ஹாட்லிக் கல்லூரி] ஏ. ஜேய்ஜெயரஞ்சன் (உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி); மத்தியபிரிவு- என் சிவகுமார் (ஹாட்லிக் கல்லூரி), ஆர். உருத்திரராஜன்(ஹாட்லிக் கல்லூரி) சி. ஜே. மனுவேல்பிள்ளை [ஹாட்லிக் கல்லூரி] மேற்பிரிவு- என். ராஜ்குமார் (ஹாட்லி) ரீ. கிருஷ்ணமூர்த்தி [ஹாட்லி], கே. மயில்வாகனம் [ஹாட்லி]; அதிமேற்பிரிவு- எஸ். குணநாயகம், பி.சிறீரஞ்சன், வீ. வசந்தகுமார் ஹாட்லி கல்லூரி மாணவர்கள்.

[பெண்கள்] கீழ்ப்பிரிவு ஆர் கல்யாணி [வடஇந்து மகளிர் கல்லூரி], கே. வசந்தி (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), இரத்தினகுமாரி கிறிஸ்தோப்பர் [மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை); மத்திய பிரிவு- வசந்தகுமாரி சிவரத்தினம் [உடுப்பிட்டி மகளிர் கல்லூரி], வீராவிஜயரட்னம் [மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலை). கிருபாமலர் செல்வத்துரை, [மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலை]; மேற்பிரிவு- பீ. சாந்தகுமாரி, (வடஇந்துமகளிர் கல்லூரி), சாரா ஏப்பிரகாம் [உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி] லலிதா தம்பியப்பா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி].

தமிழ்ப் பேச்சுப் போட்டி (ஆண்கள்] கீழ்ப்பிரிவு எஸ் மனோரஞ்சன், எஸ். இராசேந்திரன், எம் வின்சன்ட் கோமகன் [பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள்]; மத்தியபிரிவு- என் சிவகுமார், எஸ். சூரியகுமார் (ஹாட்லி மாணவர்கள்), என். அசோகன் (நெல்லியடி ம. ம. வித்தியாலயம்) மேற்பிரிவு- கே. இராமதாஸ் (ஹாட்லி), சி. ஜெயசீலன் (உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)' ரீ. பாலசுப்பிரமணியம் [தொண்டமனாறு இந்து ஆங்கிலக் கல்லூரி) அதிமேற்பிரிவு -க. மனோகரன் [உடுப்பிட்டி அ. மி.கல்லூரி), எஸ். சோதிரத்தினம், என். கிருஷ்ணராஜா (ஹாட்லி மாணவர்கள்.

[பெண்கள்]கீழ்ப் பிரிவு- ஏ.ஈ,கிறீனி [வட இந்து மகளிர் கல்லூரி] ரீ. கமலாம்பிகை [நெல்லியடி ம ம. வி.), என். ஜெயந்தி (வட இந்துமகளிர் கல்லூரி] மத்திய பிரிவு— வரதலட்சுமி ஏகாம்பரம்,மதிவதனுசோமசுந்தரம் [உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள்) வீ.இளஞ்செல்வி நெல்லியடி ம.ம. வித்தியாலயம்] அதிமேற் பிரிவு— கே.புவனேஸ்வரி [நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்).

இசைப்போட்டி — தனிப்பாடல்(ஆண்கள்] கீழ்ப்பிரிவு வா. கிருஷ்ணபிள்ளை [வதிரி திருஇருதயக் கல்லூரி] ஆர். இரகுபதி [வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி] மேற்பிரிவு— கே. குலசேகரம் நெல்லியடி ம.ம. வித்தியாலயம்[ எம். வித்தியாதரன் [வதிரி தேவரையாளி (ரீ. கலாமணி (நெல்லியடி ம ம. வி.] [பெண்கள்) கீழ்ப்பிரிவு எஸ். ஜலதா, என். இந்திரகுமாரி, எஸ். நந்தினி [மெதடிஸ்த மகளிர் கல்லூரி) மேற்பிரிவு— எஸ். சந்திரா ]நெல்லியடி ம. ம. வி.) என்.மாலினி [வட இந்துமகளிர் கல்லூரி)பீ.ராதாமணி [மெதடிஸ்த மகளிர் கல்லூரி

(8-ம் பக்கம் பார்க்க

---


"எமக்கு தரமான சித்த ஆயுர்வேத மருந்துகள் இதுவரை கிடையாதிருந்தது. அதுகாரணமாக கீழத்தேச மருத்துவத்தின் சிறந்த பலன்களை பொதுசனங்களுக்கு வழங்க வசதியில்லாதிருந்தது. முறைப்படி தயாரித்த தரமான சித்த ஆயுர்வேத மருந்துகளை தாங்கள் தந்து உதவுவதனுல் கீழத்தேச மருத்துவ வளர்ச்சிக்கு வசதியாக அமைந்திருப்பதுடன் பற்பல நோய்களுக்கு சித்திகரமாக சிகிச்சையளிக்கக்கூடியதாகவும் இருப்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

டாக்டர் வ. இராமநாதன்,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
திருக்கோணமலை.

எமக்கு வரப்பெறும் அநேக கடிதங்களில் இதுவுமொன்று.

சுந்தரம் பிறதர்ஸ்

சித்த ஆயுர்வேத மருந்துகள்,
மருத்துச் சரக்குகள் விற்பனையாளர்.

(புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவுப் பெருநாள்: முப்படை உஷார்

யாழ்ப்பாணம், சனி

கச்சதீவில் இம்மாதம் 21-ந் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கும் அர்ச் அந்தோனியார் திருநாளை முன்னிட்டு வடபகுதியின் கரையோரப் பகுதிகளில் முப்படைகளினதும் பலத்த கண்காணிப்பைச் செலுத்த பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இதற்காக இலங்கையின் மற்றைய பகுதிகளிலிருந்தும் சுமார் 200 பொலிசார் விசேஷமாகக் கடமையாற்ற இங்கு வருவார்களென பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மன்னார், யாழ்ப்பாணம், காங்கேசன் துறை, காரைநகர் ஆகிய கரையோரப் பகுதிகளில் அமைக்கப்படவிருக்கும் பரிசோதனை முகாம்களில் இவர்கள் கடமையாற்றுவார்கள்.

வடபகுதி சட்டவிரோதக் குடியேற்ற தடுப்புப்பகுதி பொலிஸ்சுப்பிரின்டென்ட் திரு. ஸ்டான்லி சேனநாயகாவின் மேற்பார்வையில் இக் கண்காணிப்பு வேலைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை விமானப்படையினரின் இரு விமானங்கள் வடக்குப்பகுதிகளில் தாழப்பறந்து ரோந்து சுற்றுமென 19-ம் திகதி இங்கு வருகின்றன. இவற்றில் வடபகுதி பொலிஸ்சுப்பிரிண்டென் திரு. ஆர். சுந்தரலிங்கம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகரா ஆகியோர் உட்பட பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள் சிலரும் கச்சதீவுப் பகுதியில் ரோந்து சுற்றி நிலைமையைப் பார்வையிடுவார்கள் எனத் தெரிகின்றது.

இத் தினங்களில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தனா, இராணுவத் தளபதி திரு. சோபால அட்டிகலே யும் இங்கு வருவார்களென நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது.

இம்முறை கச்சதீவு செல்பவர்கள் இங்கு அமைக்கப்படும் 7 பரிசோதனை நிலையங்களிலும் பரிசோதனை செய்யப்படுவதோடு, 3 தினங்களுக்குத் தேவையான உடை, உணவுகளும், இரண்டு போத்தல் குடிவகையும் மாத்திரம் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. [கா. நி]

# மின்தறி ஆலைகளில் பாகுபாடு இருக்காது

## திரு. ஜி. ஜி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், சனி

"மின்தறி நெசவாலைகள் நிறுவுவதில் தென்னிலங்கைக்கும் வட இலங்கைக்கு மிடையில் பாகுபாடு காட்டப்பட்டால் அதை ஒரு போதும் தாம் அனுமதிக்கப் போவதில்லை" என்று யாழ்ப்பாணம் எம். பியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி நெசவாளர் ஒத்துழைப்புச் சங்கத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பெருமாள் கோவிலடி நெசவாளர் ஒத்துழைப்புச் சங்கத்திற்கு மின்தறி பெறுவது சம்பந்தமாக நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. மா. ஐயன்ன சங்கம் 1938-ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது தொடக்கம் இன்று வரை அதற்கு ஏற்பட்ட உயர்ச்சி, தாழ்ச்சி பற்றியும் அது இதுவரை ஆற்றி வந்த சிறந்த பணி பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினார்.

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. கனகசபை பேசுகையில் பெருமாள் கோவிலடி நெசவாளர் ஒத்துழைப்புச் சங்கம் சிறந்த பணியாற்றியிருக்கிறதென்றும், இச் சங்கத்திற்கு மின்தறி கிடைக்க வேண்டியிருப்பது நியாயமேயென்றும் கூறினார்.

சங்கத்தின் ஆரம்பகாலம் தொடக்கம் காரியதரிசியாகக் கடமையாற்றி வருபவரும், யாழ்ப்பாணம் நெசவுத் தொழிலாளர் சங்க சமாஜத்தின் காரியதரிசியுமான திரு. து. சீனிவாசகம் பேசுகையில் இலங்கையின் பல பாகங்களிலும் மின்தறிநெசவாலைகள் நிறுவ முனைய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் பின்னர் இந்த முயற்சி ஸ்தம்பித்து இப்பொழுது இன்றைய அரசாங்கம் எடுத்துள்ள முயற்சி பற்றியும் குறிப்பிட்டார். தென்னிலங்கையிலும் வேறுபகுதிகளிலும் மின்தறி நெசவாலைகளை அரசாங்கமே தனது செலவில் நிறுவி பின்னர் அந்தந்தப் பகுதி சங்கங்களுக்கும் சமாஜங்களுக்கும் கையளிக்கவிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் இதே போன்றுதான் வட இலங்கையிலும் மின்தறி நெசவாலைகளை அரசாங்கம் தனது செலவில் நிறுவித்தர வேண்டுமென்றும், மின்தறிகளை மட்டும் கொடுத்து விட்டு இதரசெலவுகளை இப் பகுதிச் சங்கங்களிடமும் சமாஜங்களிடமும் விட்டுவிடக்கூடாதென்றும் கேட்டுக் கொண்டார்.

திரு. பொன்னம்பலம் பேசுகையில் தென்னிலங்கையில் மின்தறி நெசவாலைகள் அரசாங்க செலவில் நிறுவப்பட்டால் அதேபோன்றே வட இலங்கையிலும் நிறுவப்படுமென்றும் இதில் பாகுபாடு காட்டுவதற்குத் தாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென்றும் கூறினார். இது சம்பந்தமாக தாம் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் தகநாயகாவுடன் பேசுவதாகவும் அதேசமயம் இங்குள்ள நெசவுத்தொழிலாளர்சங்கங்களும் டாக்டர் தகநாயகாவுக்கு இதுபற்றி எழுதவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பெருமாள் கோவிலடியில் பட்டுத்துணி உற்பத்திச்சாலையொன்றை அமைக்கத் தாம் அமைச்சராக இருந்தபோது செய்த முயற்சி பின்னர் மந்திரி பதவியிலிருந்து விலகியதால் நிறைவேறாமல்போய் விட்டதென்றும் கூறினார். பெருமாள் கோவிலடி நெசவாளர் சங்கத்துக்கு மின்தறி பெற்றுத்தருவதாகவும் ... குமாரசாமி நன்றி கூறினார்.

# 3 பொலிசார் தற்காலிக வேலைநீக்கம்

கொழும்பு, வெள்ளி

கங்கிசை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மூவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். திருட்டொன்று சம்பந்தமாக கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் ஆஸ்பத்திரியில் அபாயகரமான நிலையில் அனுமதிக்கப்பட்டு இறந்ததைத் தொடர்ந்து இவர்கள் மூவரும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இந்த மூவர் மீதும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தாக்கலாகவுள்ளது.

## சீன கம்யூ........

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கள். பண்டாரநாயக்காக்களும், சேனநாயக்களும் பதவிகளில் அமர்வதற்குத்தான் பாராளுமன்ற ஜனநாயகம் பயன்படுகின்றது.

ஒரு நாட்டி உண்மையான பலம் ராணுவம்தான். திருமதி பண்டாரநாயக்கா பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்குத் தயங்கிக்கொண்டிருந்தபோது ராணுவத் தளபதி உடுகமவும், நிரந்தரக் காரியதரிசி என். கியு. டயஸும் வந்து உங்களுக்கு எதுவும் நடந்தால் நாங்கள் பொறுப்பல்லவென்று கூறிய பிறகுதான் பதவியை விடுத்தார். இதிலிருந்து ராணுவ பலம்தான் முக்கியம் என்று நான் உறுதியாகக்கூறுவேன்

## தோட்டப் பகுதியில் நாம் தமிழர்இயக்கம்: ஜனதா கூறுகிறது

கொழும்பு, வெள்ளி

'நாம் தமிழர் இயக்கம்' மீண்டும் தோட்டப்பகுதிகளில் செயல் பட ஆரம்பித்துள்ளதாகவும், நாம் தமிழர் இயக்கம் தென் இந்தியாவிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதவியினால் செயல் படுவதாகவும் இம் மாதம் 12-ம் தேதி வெளியான 'ஜனதா' என்ற பத்திரிகை முன்பக்க தலைப்பு செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

நாம் தமிழர் இயக்க உறுப்பினர்கள் திராவிடமுன்னேற்ற கழக பிரமுகரான எம். ஜி. ராமச்சந்திரனின் படம் பொறிக்கப்பட்டுள்ள பதக்கங்களை அணிவதாகவும், அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## வடமராட்சி......

(7-ம் பக்கத் தொடர்ச்சி

கூட்டுப்பாடல் [ஆண்கள்] மேற்பிரிவு—நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கீழ்ப்பிரிவு— வதிரிதேவரையாளி இந்துக்கல்லூரி [பெண்கள்] கீழ்ப்பிரிவு — பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர் பாடசாலை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், தம்பசெட்டி வட இந்துமகளிர் கல்லூரி, மேற்பிரிவு— உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பருத்தித் துறை மெதடிஸ்த மகளிர் உயர் பாடசாலை, தொண்டமனாறு இந்து ஆங்கிலக் கல்லூரி]

இப்போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் எதிர் வரும் 20-ம்திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற விருக்கும் வடமாகாண ஆசிரியர் சங்க மாவட்டப்போட்டியில் கலந்து கொள்வர்.

# 170 பேருடன் வடக்கில் முதல் விவசாயப்படை

## கிளிநொச்சி எம். பி. ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்தின் முதலாவது விவசாயப்படை முகாம் நேற்றுக் காலை 10-29 க்கு விஸ்வமடுக்குளத்தில் ஆரம்பித்துவைக்கப் பட்டது. கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆரம்பித்து வைத்தார்.

400 பேர் தேவையான இந்த விவசாயப்படை 170 பேருடன் மட்டும் ஆரம்பிக்கப்பட்டது. அழைத்தவர்கள் வந்துசேராததாலேயே இந்நிலைமை ஏற்பட்டது.

விவசாயப்படை ஆணையாளர் மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் அதிகாரிகள் பலர் இவ்வைபவத்தின் போது கலந்து கொண்டனர்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், ஆரம்பத்தில் வேலைகள் கஷ்டமாக இருந்தாலும், போகப் போக எல்லாம் பழக்கப் பட்டுவிடுமென்றும், நாட்டிற்கு நன்மை செய்யும் இப் புனிதப்பணியை ஏற்றுக் கொள்ளும் இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டுஎன்றும்கூறினார் அவர் நேற்று நண்பகல் 12 மணியளவில் மண்வெட்டியினால் வாய்க்கால் வெட்டி வேலையை ஆரம்பித்துவைத்தார். [நல். நி.]

# பர்மா ஜனாதிபதி நீவின் இந்தியா விஜயம்

புதுடில்லி, மார்ச் 15

பர்மிய ஜனாதிபதி ஜெனரல் நீவின் இன்று இந்தியா வந்து சேர்ந்தார்.

ஜெனரல் நீவின்ஒருவாரம் இந்தியாவில் தங்கியிருப்பார். இருநாடுகளுக்குமிடையில், பொருளாதார வர்த்தகத் தொடர்புகள்பற்றி அவர் இந்தியாவில் தங்கியிருக்கும்போது பேச்சு வார்த்தைகள் நடத்துவார்.

இன்று ஜெனரல் நீவின் பாலம் விமானநிலையம்வந்து சேர்ந்தபொழுது இந்திய ஜனாதிபதி டாக்டர் சாகிர் ஹுசேன், பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி ஆகியவர்கள் வரவேற்றனர்.

## கண்டக்டர் தற்காலிக வேலைநீக்கம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இ. போ. ச. கண்டக்டர் ஒருவர் தற்காலிகவேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட கண்டக்டர்டிக்கட்மோசடி ஒன்று சம்பந்தமாகவே வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [கா. நி.]

# "பிறநாட்டு நாடகங்களுடன் தொடர்பு படுத்தக்கூடாது"

உடுவில், வெள்ளி

"தமிழ் நாடகங்கள் தொன்மை வாய்ந்தவை. இந்த சிறப்புமிக்க கலையை பிறநாட்டு நாடகங்களுடன் தொடர்பு படுத்திக்கொள்வது தமிழ் பண்பாட்டுக்கு முரண்பாடானது".

உடுவில் கிராமசபையின் ஆதரவில் உடுவில் திறந்த வெளிஅரங்கில் நடைபெற்ற பௌர்ணமி கலைவிழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் உடுவில் கிராமசபையின் தலைவர் திரு. சி. முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சி. முத்துலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எமது நாட்டில் நாடகங்களை எழுதக்கூடிய பல கலைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களை சிறந்த முறையில் பயன்படுத்தி நல்ல தமிழ்ப் பண்பாடுமிக்க நாடகங்களை மேடையேற்றவேண்டும். ஆங்கில நாடகங்களையோ, அல்லது பிறமொழிக்கதைகளைத் தழுவியோ நமது கலைஞர்கள் நாடகங்களை அமைத்தல்கூடாது.

கலைவிழா நிகழ்ச்சியில் இலங்கையர்கோன் நாடக மன்றத்தினரின் "அடிப்பன் பல்லுடைய" என்ற நகைச்சுவை நாடகம் இடம் பெற்றது.

## இடதுசாரி அபேட்சகர்கள்

கொழும்பு, வெள்ளி

திக்கவெரெட்டியா, ஹபரதுவ ஆகிய தொகுதிகளுக்கு இடதுசாரி கட்சியைச்சேர்ந்தவர்கள் அடுத்தபொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களாக நிறுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன இந்தமுடிவை மேற்கொண்டுள்ளனவாம்.

'தனிச்சிங்கள இயக்கத்தை ஆரம்பித்துள்ள முதியான்சே தென்னக்கோனின் தொகுதியான திக்கவெரெட்டியாவிலும், இயக்கத்துக்கு பெருத்த ஆதரவைத்தெரிவிக்கும் பிரின்ஸ் குணசேகராவின் தொகுதியான ஹபரதுவாவிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகர்களை நிறுத்தக்கூடாதென்றும், கம்யூனிஸ்ட், சமசமாஜ அபேட்சகர்களையே நிறுத்தவேண்டுமெனவும் இடதுசாரிக் கட்சி சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடத்தைக் கேட்டுள்ளதாகவும் தெரிகிறது.

## நாளை கொக்குவில் கி. ச தலைவர் தெரிவு

நல்லூர், சனி

கொக்குவில் கிராமசபை தலைவராகப் பணியாற்றிய திரு. அ. அருளம்பலம் உள்ளூராட்சி ஆணையாளரால் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து புதிய தலைவர் தெரிவு நாளை நடைபெறும். இத்தலைவர் தெரிவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. முருகவேள் தலைமையில் நடைபெறும்.

## பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், சனி

பரந்தனில் நடைபெற்ற கார் சைக்கிள் மோதலில் மரணமான விஜயரத்தினத்தின் மரணம் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட கார்ச் சாரதியான பதமநாதன் என்பவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாருக்காக யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல் ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org